க. பரணீதரன்
2008-06-24

விலை
ரூபா 20/-

# கூத்தரங்கம்

அளிக்கை - 20

## நாடகக் கலைக்கு ஓர் அணிகலன்



கலைப்பேரரசு
ஏ.ரி.பி
சிறப்பிதழ்



விழிச்சுடர் நாடகம்

கூத்தரங்கம்

**ஆரம்பம் - மார்ச்- 2004**

யூலை 2007 அளிக்கை 20

**திறந்த மனமொன்று வேண்டும்**

**ஆசிரியர் குழு:**
தே.தேவானந்த்
அ.விஜயநாதன்
**நிர்வாக ஆசிரியர்:**
தே.பிரேம்
**வடிவமைப்பு:**
**கணினித் தட்டச்சு:**
ந.கஜித்தா

**வெளியீடு:**
செயல்திறன் அரங்க இயக்கம்
**Active Theatre Movement**
தொ.பே.: 0777 286220
e.mail :
atmtheva@yahoo.co.uk
atm_programe@yahoo.co
premtheva@yahoo.com

தொடர்புகளுக்கு:
அருளகம், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம், இலங்கை.

**Contact:**
Arulaham, Adiyapatham road,
Thirunelvely, Jaffna, Sri lanka.

# படைப்புக்களே கோட்பாடுகளையும் நுட்பங்களையும் உருவாக்க வேண்டும்.



நாடகம் கற்கைத் துறையாக மேற்கிளம்பிய திலிருந்து மக்களுக்கான கலைப்படைப்பு உருவா வதற்கான வாய்ப்புக்கள் குறைவடைந்திருக்கிறது. விமர்சிப்பவர்கள் கலைப் படைப்புக்களை புலமை சார்ந்த அல்லது வித்துவ நிலையில் நின்று விமர்சி ப்பதனால் ஆக்கச்சூழல் இல்லாது செய்யப்படுவ தாகவே நான் உணர்கிறேன். விமர்சிப்பதால் புலமையாளர்கள் தம்மை உயர்ந்தவர்களாக ஆக்கிக் கொள்வதே நடைபெறுகின்றன. உண்மை யான கலை, உண்மையான கலைஞன் உருவாவதற்கான, மதிக்கப்படுவ தற்கான வாய்ப்புக்கள் இல்லாமல் போகின்றன.

நான் 1970 களில் பெரதேனிய பல்கலைக் கழகத்தில் கல்விகற்ற போது நாடகங்களைப் படைப்பதில் ஆர்வமாக இருந்திருக்கிறேன். அப்போது எம்மைப் போன்ற இலக்கியத்தில் ஆர்வம் காட்டுபவர்கள் பல நாடகங்களில் ஈடுபட்டார்கள். அப்போது எமக்கு இருந்ததெல்லாம் பார்ப்பவர்களுடைய மனதைத் தொடுகின்ற நாடகங்களைப் போடவேண்டும் என்பதாகும். நாடகக் கோட்பாடுகள் பற்றியோ நுட்பங்கள் பற்றிய எண்ணங்கள் எமது மனதில் இருந்தது கிடையாது. அதனால் நாம் மனதைத் தொடுகின்ற நாடகங்களைச் செய் தோம். குறிப்பாக ''துடிக்கும் இதயங்கள்'' என்ற நாடகத்தை மேடையேற்றியிருந்தோம். அப்போது நடைபெற்ற தமிழ் விழா நாடகப் போட்டியில் முதலாவது நாடகமாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இதற்கான கதையை உண்மை யாக நடந்த ஒரு சம்பவத்தை அடிப்படை யாகக் கொண்டே தயாரித்திருந்தோம்.

அன்று பெரதேனியாப் பல்கலைக்கழகத்தில் மார்க்கோர்ஸ் என்ற மண்டபத்தில் ஒரு அறை இருந்தது. அந்த அறைக்குள் ஒருவரும் செல்வது கிடையாது. ஏனென்றால் அந்த அறையில் தங்கியிருந்த ஒரு மாணவன் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டான் என்பதாலாகும். அது ஏனென்று ஆராய்ந்தபோது அவன் ஒரு கல்லுடைக்கும் தொழிலாளியின் மகன் தகப்பன் இல்லை. தாய் கல்லுடைத்துப் பெறும் ஊதியத்திலிருந்து இவன் கல்வி கற்று வந்தான். இவனுக்குச் சிறப்பான ஆடைகள் உடுப்பதற்கான வசதிகள் இல்லை. வசதியீனம் காரணமாக இவன் மற்றவர்களிடமிருந்து ஒதுங்கிக் கொண்டான். ஏனைய மாணவ மாணவிகள் இவனைக் கிண்டல் செய்தார்கள். இதனால் இவன் தாழ்வுச் சிக்கலுக்கு உட்பட்டு இறுதியில் தற்கொலை செய்து கொண்டான். இக் கதையை அவனது தாயிடம் சென்று கேட்டறிந்து நாம் ஒரு நாடகமாகச் செய்திருந்தோம். இந்த நாடகம் பலரையும் உணர்வு நிலையில் பாதிப்புக்கு உள்ளாக்கியிருந்தது. இன்றும் பலர் அந்த நாடகம் பற்றிக் கதைப்பார்கள்.

ஆனால், இன்று நாடகம் கற்றறிந்து, நுட்பங்களூடாகவும் கோட்பாடுகளூடாகவும் வெளிப்படுத்த ஆரம்பித்ததிலிருந்து எம்மைப் போன்று ஆர்வத்தினால் நாடகங்களை மேடையேற்ற விரும்புகிறவர்கள் நாடகங்களை தயாரிக்க முடியாதநிலை உருவாகியிருக்கிறது.

'கோட்பாட்டு வாத, அல்லது நுட்பியல்வாத வெருட்டல்கள்' காரணமாக சாதாரணமாக விருப்பத்தில் நாடகங்கள் செய்தவர்கள் பயப்படுகின்றார்கள். நவீன கோட்பாடுகள் உள்வாங்கி நாடகங்களை மேடையேற்றியபோது, அது தன்னுடைய இயல்பான பண்பாட்டுடன் கூடிய ருசியை இழந்துவிட்டது என்றே கூறலாம். அநேகமாக நுட்பங்களும் கோட்பாடுகளுமே இன்றைய நாடகங்களில் முன்துருத்தி நிற்கின்றன.


இன்று, கோட்பாடுகளையும் நுட்பங்களையும் கற்றுவிட்டு, நாடகங்கள் போடுகிறார்கள். அவ்வாறே மற்றயவர்களும் போட வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். உண்மையில் படைப்பிலிருந்துதான் கோட்பாடுகள் வர வேண்டுமே தவிர, கோட்பாடுகளிலிருந்து படைப்புக்கள் வரமுடியாது. கோட்பாடுகளை உருவாக்கக் கூடிய நல்ல படைப்புகள் வெளிவருவதற்கான வாய்ப்புக்களைக் கலை கற்கைத் துறையாக வந்த பின்பு கொடுக்க மறுக்கின்றது. இன்று பல்கலைக்கழகத்தை எடுத்துப் பார்த்தால் நாடக பாடம் கற்பவர்கள் தான் நாடகங்கள் போடலாம், என்ற நிலை மாணவர்கள் மத்தியில் காணப்படுகின்றது. ஆனால், முன்பு அவ்வாறில்லை அனைத்துத்துறை மாணவர்களும் தம்பாட்டில் நாடகங்களைப் போட்டார்கள். நாடகக் கற்கை செயற்கையாகக் கலைஞர்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு, தோல்வி கண்டு வருகிறதாகவே தோன்றுகிறது. முதலில் கலைஞன் உருவாக வேண்டும். அதன்பின் அவனிடம் கோட்பாடுகளும் நுட்பங்களும் இணைகின்ற போது உச்சமான படைப்புகள் வெளிவரும்.

இதனைவிட, கலைஞர்கள் இன்று புலமையாளர்களின் அங்கீகாரத்தை எதிர்பார்க்கின்றார்கள். கற்றவர்கள் 'நல்லது' என்று சொல்லுவதைப் பேறாக நினைக்கின்றார்கள். இதனால், படைக்கப்படுகின்ற படைப்பையும் படைப்பாளியையும் விட, புலமையாளன் உயர்ந்தவனாகித் தன்னுடைய புலமைத்துவத்தால் எளிய உண்மையான கலைஞனைச் சுரண்டித் தான் இலாபம் அடைகின்றான். இதனையே பேராசிரியர்.சு.வித்தியானந்தன், பேராசிரியர். கணபதிப்பிள்ளை போன்றவர்களும் செய்தார்கள். இன்றும் அதனையே செய்கிறார்கள்.

புலமையாளன் முதன்மைப்படாது படைப்பும் கலைஞனும் முதன்மைப்பட வேண்டும். நாடகக் கலை மற்றும் கலைகளைப் பல்கலைக்கழக வரையறைகள், சட்டதிட்டங்களுக்குள் உட்படுத்தி வளர்க்கலாமா? என்ற கேள்வி என்னிடம் உள்ளது. இத்தனை கட்டுப்பாடுகளுக்கூடாக எப்போதாவது ஒருவர் அல்லது இருவர் கலைஞர்களாக வெளித்தெரிந்தாலும் ஒட்டு மொத்தத்தில் பல்கலைக்கழகச் சூழ்நிலைகள் கலைகளின் வளர்ச்சிக்கு கலைஞர்களுடைய வளர்ச்சிக்கு ஏற்புடையனவாக இல்லை என்றே கூறலாம்!

பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் (பீடாதிபதி, கலைப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

# கலைப்பேரரசு ஏ.ரி.பி



ஈழத்து நாடக உலகில் மூத்த கலைஞராக நம் மத்தியில் வாழ்ந்து மறைந்து போன ஏ.ரி.பி யுடனான தொடர்பு 1997 இல் ஏற்பட்டது. அப்போ, நான் பல்கலைக் கழகத்தில் கல்விகற்றுக் கொண்டிருந்தேன். ஒரு சைக்கிளில் அடிக்கடி பல்கலைக்கழகம் வரும் ஏ.ரி.பி அவர்கள் நாடக மாணவர்களோடு உரையாடுவதில் அதிக ஆர்வமுடையவராக இருந்தார். அப்போது, பல்கலைக்கழகத்தில் கலைவாரம், விஞ்ஞானவாரம், மருத்துவ வாரம், மகோஸ் வாரம், அக்கிரோ வாரங்கள் நடைபெறும் அவற்றில் நடைபெறுகின்ற நாடகப் போட்டிகள் ஒவ்வொன்றையும் பார்ப்பதற்காகவும் சில வேளைகளில் மதிப்பீட்டாளராகவும் சமுகந்தந்திருக்கிறார். தனது வயோதிபக் காலத்திலும் ஓடி ஓடி அவர் நாடகங்களைப் பார்த்து தன் அபிப்பிராயங்களைப் பகிர்ந்து கொள்வதைப் பார்க்கின்ற போது வியப்பாகவிருந்தது. நாடகம் என்றதும் இளைஞர்களிடம் காணப்படாத ஒரு உற்சாகம் அவரிடம் எப்போதும் இருந்திருக்கிறது.

ஒரு நாள் என்னைக் கண்டபோது ஒரு பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டியைப் பார்த்துவிட்டு வருவதாகக் கூறிய அவர் இந்த வருடம் மட்டும் நான் 47 நாடகங்களைப் பார்த்திருக்கிறேன் என்று குறிப்பிட்டார். நான் குறிப்பிடுவது 1998ம் ஆண்டு அதன் பின் நடக்கமுடியாமையால் அவர் மெல்ல மெல்ல வீட்டுக்குள் முடங்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

1978 இல் நாடக அரங்கக் கல்லூரியில் நடத்தப்பட்ட ஒரு வருடகால பயிற்சிப்பட்டறையில் கலைப்பேரரசுப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட ஏ.ரி.பி அவர்கள் அ.தாஸீஸியரிடம் பணிவாக, கற்றுக்கொள்ளும் ஆர்வமிக்க மாணவனாக நின்றது பற்றி அடிக்கடி குழந்தை ம.சண்முகலிங்கமவர்கள் குறிப்பிடுவது என் நினைவில் நிற்கிறது.

அந்த ஆர்வம் உடல் தளர்வால் வீட்டில் முடங்கும் வரை அவரை இயக்கியது என்பது தான் வியப்பானது. 1998 இல் நாடக அரங்கக் கல்லூரி நடத்திய பத்து தொடர் கருத்தரங்குகளுக்கு ஏ.ரி.பி அவர்கள் தவறாது சமுகம் தருவார்.

நான் எனது பல்கலைக்கழகக் காலத்தில் தயாரித்து மேடையேற்றிய அனைத்து நாடகங்களையும் பார்த்து பாராட்டியதோடு, தனது அபிப்பிராயங்களையும் பகிர்ந்து கொண்டிருக்கிறார். 1998இல் விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தினால் வறிய மாணவர்களுக்கான நிதி சேகரிப்புக்காகத் தயாரிக்கப்பட்ட விழிச்சுடர் நாடகம் ஒன்பது தடவைகள் மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் மேடையேற்றப்பட்டது. இதில் மூன்று இடங்களில் ஏ.ரி.பி அவர்கள் நாடகத்தைப் மீண்டும், மீண்டும் பார்த்திருக்கிறார். இளம் பல்கலை நடிகர்களுடன் உறவாடி உற்சாகமூட்டியிருக்கிறார். பின்னர் அந் நாடகம் பற்றிய அபிப்பிராயத்தை எழுதித் தந்திருந்தார். பத்திரிகை ஒன்றுக்கும் கூட அனுப்பியிருந்தார். அன்று நிலவிய பத்திரிகைத் தாள் தட்டுப்பாடு காரணமாக அந்தக் கட்டுரை பிரசுரமாகவில்லை. அந்தக் கையெழுத்துப் பிரதியை பிறிதொரு நேரம் வீடு சென்றிருந்தபோது என்னிடம் தந்திருந்தார். அது கூத்தரங்கில் பிரசுரமாகிறது.

1999 இல் சிறுவர் அரங்கு தொடர்பான ஆய்வொன்றைச் செய்ய முற்பட்டபோது, சிறுவர் அரங்கிற்கான எழுத்துருக்களைச் சேகரித்தேன். அதன் போது தான் எழுதிய சிறுவர் நாடகங்களை குறிப்பாக, நூலாக வெளிவந்த 'மயில்' என்ற நூலைத் தந்ததோடு, தான் 1995ம் ஆண்டில் இடம்பெயர்ந்து வடமராட்சி கரவெட்டி என்ற இடத்தில் வாழ்ந்தது பற்றிக் குறிப்பிட்டு, அப்போது கரவெட்டியில் உள்ள சிறிய பாடசாலைகளுக்கு சிறுவர் நாடகங்கள் பழக்கியது பற்றி விபரித்தார். அவ்வாறு பழக்குவதற்காக தான் எழுதிய ஒரு சிறுவர் நாடக எழுத்துருவை கையெடுத்துப் பிரதியாக எனக்குத் தந்திருந்தார். 'மான்' என்ற அந்த எழுத்துருவும் கூத்தரங்கில் பிரசுரமாகிறது.

தற்போது, ஏ.ரி.பி நாடக விருது வருடாவருடம் வழங்கப்படுகிறது. இவ்வாண்டு நவாலியூர் செல்லத்துரைக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் ஏ.ரி.பி சிறப்பு நூலாக இதனை வெளியிடுதல் பெருமை தருகிறது. நாடகத்தை நேசித்த, நாடகக் காரனாக தன்னை இனங்காட்டிய ஒரு அற்புதமான கலைஞனை நினைவு கூர்வதில் கூத்தரங்கம் பெருமை கொள்கிறது. அவரது படைப்புக்கள் எதிர்காலத்தில் அரிய ஆவணமாகப் பேணப்பட வேண்டும்.

-தே.தேவானந்த் (ஆ.ர்)

# ஜதீகக் கதை ஊடாக சமூக நிலைப்பாடுகளை வெளிப்படுத்திய விழிச்சுடர் நாடகம்



*1998ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தால் தயாரித்து மேடையேற்றப்பட்ட நாடகத்திற்கு ஏ.ரி.பி அவர்கள் எழுதிய விமர்சனம் இங்கு தரப்படுகிறது. பிரசுரிக்கப்படாது கையெழுத்துப் பிரதியாகக் காணப்பட்ட இந்த விமர்சனக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.*

*இந்த நாடகத்தை மூன்று தடவைகள் ஏ.ரி.பி அவர்கள் பார்த்து மகிழ்ந்திருந்தார்.*

**யா**ழ் பிரதேசத்தில் ஒன்பது தடவைகள் மேடைகண்ட ஆக்கமாக மக்கள் விமர்ச்சிக்கும் நாடகமாக அமைகிறது. 'விழிச்சுடர்' யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் நடித்த, கலைஞன் தே.தேவானந்த் நெறியாள்கையில் உருவாகிய இந்த நாடகம் ஒரு குறியீட்டு நாடகம். அரசகதை போன்ற தோற்றம்: ஆனால் அது சுட்டிநிற்கும் சமூக நிலைப்பாடுகள், கோலங்கள், ஏழைகளின் இன்னல்கள், அடிமைப்படுத்த கையாளப்படும் தந்தரங்கள் சுயநலத் தொழிற்பாடுகள், புன்நெறி, நன்னெறியை விஞ்சினாலும், புன்நெறி அழியும், நன்னெறி திரும்பவும் தழைத்து மேலோங்கும் என்ற தத்துவங்கள் சுவைஞர்களின் சிந்தனைக்குத் தீனி போடுவனவாக அமைகின்றன. மதிநுட்பமாக நடிப்புக்கு நல்ல வாய்ப்பு அளிக்கும் வகையில் கதைக் கட்டமைப்பும், ஓட்டமும் அமைகின்றன. உடுவில் மகளிர் கல்லூரியிலும் தொடர்ந்து கைலாசபதி அரங்கிலும், அண்மையில் சுண்டிக்குழி மகளிர் கல்லூரி மண்டபத்திலும் மூன்று தடவைகள் பார்த்தேன். இன்னும் நயக்கலாம் போல் நினைவு.......

ஆரம்பத்தில் ஒருவித அதிர்வுடன் நாடகம் தொடங்கினால் பார்வையாளர் மத்தியில் ஒருவித உத்வேக அலை வீசும்: உடனடியாகவே நயப்புநிலை உருவாகும் என்பர் நாடக வல்லுநர்கள். இந்த உத்தி நன்கு தொழிற்படுகிறது நாடகத்தில். உறுமல், பயங்கர ஓலம், அந்தகாரம் சகிதமாக கொடூரம் கொப்பளிக்க இருவேறு பயங்கர தோற்றத்தில் இரண்டு அரக்கர்கள் தோன்றுகிறார்கள். அவர்களின் நடைகள் நகர்வுகள் தொங்கல்கள் புல்லியர்கள் என்பதைச் சுட்டின. 'மயாமுகி' நாடு சென்று நாசம் செய்து மிருக, நரமாமிசங்களை உண்டு தமது சுயநல திட்டத்தை நடைமுறைப்படுத்தத் திட்டம் தீட்டுகிறார்கள். பெண்களாய் மாறுவேடம் பூ ண்டு கருமம் சாதிப்பது சுலபம் என்று தீர்மானிக்கிறார்கள். அதிபயங்கரமாக அதிர்வடையும் வகை நடிப்பு அமைந்தது. காத்திரமான நடிகர்களே!

இருவர் நடிப்பைத் (couple acting) தொடர்ந்து குழு நடிப்பு (Group acting) மக்கள் சகிதம் அரசனாடும் பொங்கல் பண்டிகை தீப நடன சாயல் உள்ள கிராமிய ஆட்டம் நடக்கிறது. வஞ்சகமற்ற மக்கள் சுதந்திரமாக நற்பண்புடன் வாழ்வதை இக் காட்சி முன் வைக்கிறது. இறுதியில் பொங்கல் பானை உடைவது ஏக்க உணர்வின் இழை யோட்டத்தை சகல நடிகர்கள் முகத்திலும் பதிக்கிறது. அவ்வேளை அரக்கர்கள் பெண்ணாக மாறி நாட்டில் புகுந்து அரசனையும் மயக்கி உள்வீட்டுப் பிள்ளைகள் ஆகிவிடுகின்றனர். குதூகலமான சமூகத்தில் அல்லது நாட்டில் புன்னெறிச் சக்திகள் தந்திரமாய் புகுவதால் ஏற்படும் விளைவுகள் நகர்த்தப்படுகின்றன. அரசி தடுக்கவும் மன்னன் பெண்களை ஏற்றமை, மற்றும் பல கட்டங்களில் ஸ்திரமற்ற ஒரு நொய்தல் அரசனாக வெருளித்தன நிழல் விழ நடிக்கும் வேளை தனித்துவம் பாய்ச்சப்படுகிறது. இந்த நடிப்புச் சிறப்பை சுண்டிக்குளி அரங்கில் காணமுடியவில்லை. பெண்களாக வந்த இரு நங்கையரும் உச்சமாய் நடித்து நாடக நயப்பில் இரசிகரை ஒரு உச்சநிலைக்குக் கொண்டு சென்றனர்.

மிருகங்கள் களவாடப்படுதல், தோட்டம் துரவு நாசமாக்கப்படுதல், மக்கள் காணாது போதல் போன்ற அவலங்களை மக்கள் முறையிடல், காரணம் காண அரசன் ஏவலாளரை ஏவுதல் என்ற நிலையில், மாயப் பெண்கள் இவற்றிற்கு காரணம் அரசியும் மந்திரி மனைவியுமே என தந்திரமாகப் பேசி மன்னனை நம்ப வைக்கின்றனர். மக்களாய் நடித்த வர்கள் ஊமம் உத்தியில் முண்ட நடிப்பாக ஒருவரை ஒருவர் விஞ்சும் வகை தமது நிலைப்பாட்டில் நின்று நடித்தனர். சிறுபாத்திரங்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை. அரசியையும் மந்திரி மனைவியையும் காட்டுக்கு அனுப்பி கண்களைத் தோண்டி கொன்றுவிடும் படியான காட்சிகளில் பழைய நாடகங்களில் வரும் வன வாசம், ஞான சவுந்திரி நாடகத்தில் வரும் ஒரு காட்சி போன்றன வருகின்றன. ஆனால், பழைய பாத்தியில் புதிதுகளைக் காண்பது போன்ற பிரமை ஏற்படுகிறது. சிலவகை இரசிகர்களுக்கு இவை இன்பம் தருகின்றன. கற்பவதிகளாக அரசியும் மந்திரி மனைவியும் இருந்ததால் பிள்ளைகள் பிறப்பது. அவை இயற்கையின் அரவணைப்பில் வளர்வது என்றெல்லாம் காட்டுமிடத்தில்

இயக்குனர் காட்டு மிருகங்களே அன்பு காட்டித் தாலாட்டி வளர்ப்பதாக நெறியாள்கை செய்த இடத்தில் மாந்தரைவிட மிருகங்கள் மனிதத்துவத்துடன் வாழ்கின்றனவே என எண்ண வைக்கப்படுகிறது. பிறந்த இக்குழந்தைகளே இளைஞர் களாய் வளர்ந்து இத்தனைக்கும் காரணமான அரக்கர்களை (தீய சக்திகளை) சம்காரம் செய்து மக்கள் மத்தியில் பூ ரண சுதந்திரத்தை நிலைநாட்டுகிறார்கள். அனைவரும் முடிசூடி இறுதியில் பாடி ஆடுதல் மூலம் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற சிந்தனை பரவ விடப்படுகிறது.

ஒரு தடவை பார்த்து முழுவதையும் பூ ரணமாகப் புரிந்திட முடியாதுதான். தோற்றத்தில் ஒன்றாக உள்ளே ஆழமான கருத்தோட்டம் கொண்டதாக அமைந்தமை காரணமாகலாம். விளங்க சிரமமாய் இருக்கிறதென்றால் பார்வையாளரின் பரீட்சியம் (நாடகம் பார்த்தலில்) குறைவு என்பதே காரணமாகிறது. ஆயின் அனைத்து அரங்குகளிலும் சுவைஞர்களைத் திருப்திப் படுத்தியது நாடகம் என பலரும் கருதினர். நான் சுவைத்த அரங்குகளிலும் இதேநிலைதான். கைலாசபதி அரங்கில் சிறு சலசலப்பு சப்தங்கள் ஏற்படுத்தும் முயற்சி கைவிடப்பட்டது.

அரச நாடக கோலமானதால், காட்சிப்படுத்திலில் இயக்குனர் அதீத உத்தியை கையாண்டாலும், கணக்காக, கட்டுப்பாடாக நயக்கும் வகை உபயோகித்தது அவரது விவேகத்தை அனுபவத்தைக் காட்டுகிறது.

நடிப்பைப் பொறுத்தமட்டில் அதீத நடிப்பே இதற்குரியது. ஆனால் நாடகத்தில் கணக்கு என்ற கோட்பாட்டை கையாண்டு வெற்றிப்படியில் நிற்கிறார்.

குழுநிலை நடிப்புக்கள் மாறிமாறி வருவதும் இவற்றில் ஊமமுறை உபயோகிக்கப்படுவதும் சிறப்பம்சமாகிறது. பலவேறு உத்திகள் மாறி மாறி நாடகத்தில் பயன்படுத்தப்படலாம். ஆனால், உத்திகளின் தொகுப்பாக மட்டும் நாடகம் அமையக்கூடாது. அவற்றினூடாக உணர்ச்சிகள் முறையாகக் காட்டப்பட வேண்டும். இந்த ஆக்கத்தில் ஒவ்வொரு பத்து நிமிடங்களிலும் நிகழும் சம்பவங்களில் முக்கியமாக பலவேறு உணர்ச்சிகளின் முழுமை தெரிந்தது. காட்சி இன்பம் ஒருபுறம்: கருத்தோட்டம் ஒருபுறம்: மேலாக காட்டப்பட வேண்டிய உணர்ச்சிகள் காட்டப்பட வேண்டிய அளவில் காட்டி நடிக்கப்பட்டதே திருப்தி தந்தமைக்கு முக்கிய காரணமெனலாம்.

கண்ணன் குழுவுக்கு பின் நாடகத்துக்கு இசை அமைக்க ஆளில்லையே என்ற எண்ணத்தை முறியடித்துவிட்டனர் இந்த நாடகத்துக்கு இசைய மைத்தோர். சரிநிகர் சமானமாக ஆண்பெண் நாற்பது பேர்வரை சத்திய அடிப்படையில் பண் பாகப் பழகி. இந்த வெற்றி நாடகத்தைத் தந்தமையை யாழ் நாடக உலகு மறக்காது. எப்படியோ தே.தேவானந்த் நாடகம் வல்லார் குழந்தை சண்முகலிங்கத்தின் அடியொற்றி நிற்பவராச்சே!



# விருட்சத்தின் விழுதுகள் சிறுவர் நாடக விழா

'விருட்சத்தின் விழுதுகள்' எனும் தலைப்பில் 23.06.2007 அன்று கைதடி அரச முதியோர் இல்லத்தில் நாடக விழா ஒன்று இடம் பெற்றுள்ளது. நாவற்குழிப் பகுதியைச் சேர்ந்த 5 கிராமங்களின் சிறுவர் கழகங்கள் இணைந்து இந்த நிகழ்வினை நடத்தியுள்ளனர்.

குழு நடனம் (வீரபத்திரர் கோவிலடி, அரங்கமலர் சிறுவர் குழு) விசேட கூத்து (செல்வநகர், அரங்கநகர் சிறுவர் குழு) விஞ்ஞான நரியார் – சிறுவர் நாடகம் (வேலம்பிராய் காந்தி சிறுவர் குழு) குழு நடனம் (நாவற்குழி தெற்கு, கலைவாணி சிறுவர்குழு) தேடி வந்த செல்வம் – சிறுவர் நாடகம் (கோயிலாக்கண்டி மத்தி, அரங்கத்தாளம் சிறுவர் குழு)

போன்ற நிகழ்வுகள் காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை இடம் பெற்றது. இந்த நிகழ்வுக்கு செயல் திறன் அரங்க இயக்கம் அனுசரணை வழங்கியமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

சிறுவர்களின் நிகழ்வுகளுக்கு இடையே முதியவர்களும் பாடல் பாடி மற்றவர்களை மகிழ்வித்தனர். சிறுவர்களின் நாடக நிகழ்வை முதியவர்கள் மிகவும் சந்தோஷமாக இரசித்தனர் என்பதை அவர்களின் இறுதி நேர ஆடல் நிகழ்வின் போது அவதானிக்க முடிந்தது. சிறுவர், முதியோர் இணைந்து பாடி ஆடிய காட்சி மனதை மிகவும் கவருவதாக இருந்தது.

நாடகம் நடைபெற்ற மண்டபத்திற்கு வரமுடியாது இருந்த முதியவர்களை அவர்களுடைய இடத்திற்குச் சென்று சிறுவர்கள் சந்தோஷமாக அவர்களுடன் அளவளாவினர்.

இந்த நிகழ்வில் நிறைவுரை ஆற்றிய முதியோர் இல்லத்தின் பொறுப்பதிகாரி என்.இராஜலிங்கம் இந்த நிகழ்வு போன்று அடிக்கடி சிறுவர்கள் இந்த இல்லத்திற்குச் சமூகம் தரவேண்டும். முதியவர்களுடன் ஆடிப்பாடி சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

விழுதுகளும் விருட்சங்களும் கலந்துறவாடும் நிகழ்வு அடிக்கடி இடம்பெற வேண்டும் என்பது தான் முதியோர்களின் அவாவும் என்பது குறிப்பிடத்தக்கது.





கே.சுபா

# நாடகக் கலைக்கு ஓர் அணிகலன்



கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ்

இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ் பற்றி முதலில் விளக்க முற்பட்டவர் இளங்கோவடிகள். அவருடைய காப்பியமான சிலப்பதிகாரம் இதனைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. சிலப்பதிகாரப் பதிகச் செய்யுளில் வருகின்ற 'நாடகமேத்தும் நாடகக் கணிகை' என்ற தொடர் மாதவியின் ஆற்றலை உணர்த்தும் நிலையில் நாடகம் பற்றிய குறிப்பாகவும் அமைந்துள்ளது. ஆடலும் பாடலும் நடிப்பும் கைவந்த மாதவியின் ஆற்றல் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கலை வடிவம் என்ற நிலையில் இன்று பேசப்படும் 'நாடகம்' என்ற சொற்பயன்பாடு மிகப் பழைமையானது என்பதையும் இதன் மூலம் ஊகித்தறிய முடிகின்றது.

நாடகக் கலையை விரும்பிப் பயின்று அதனால் பலரையும் கவர்ந்த கலைஞர்கள் பலர் உளர். அவர்களுள் ஈழத்தில் வாழ்ந்த நாடகக் கலைஞர் திரு.ஏ.ரி. பொன்னுத்துரை பற்றிய நினைவுகளைப் பகிருவதே இந்த எழுத்துருவின் இலக்காகும். நாமறிந்த கலைஞர்களின் நினைவைப் பகிர்தலும் கையளித்தலும் ஒரு காலக்கடமையாகும். இளைய தலைமுறையினருக்கு மறைந்த கலைஞர்களைப் பற்றிய அறிமுகம் ஒன்றும் இன்றியமையாதது.

## ஏ.ரி.பொன்னுத்துரையின் ஆளுமைச் சிறப்பு:



ஈழத்து நவீன தமிழ் நாடகத்தின் நெறிப்பாடுகளையும் வளர்ச்சிப் போக்குகளையும் அறிய விரும்புபவர்: இவர் பற்றி அறிய வேண்டும். நாடக ஆசிரியன், நடிகன், நெறியாளன் என்ற முத்திறமும் வாய்க்கப் பெற்றவர். நாடகம் பற்றிய ஆய்விலும் ஆர்வமுடையவர். குறிப்பாகப் பாடசாலை நிலையில் பெரும் பங்களிப்புச் செய்தவர். நாடக எழுத்துப் போட்டிகளிலே வெற்றிகளைக் கண்டவர். கலைச்செம்மையும் கருத்துச் சீர்மையும் இளம் உள்ளங்களில் பதியப் பணியாற்றியவர். பரமேஸ்வராக் கல்லூரியில் மாணவனாக இருந்த போதே நாடகத்தில் நடித்தவர். குரும்பசிட்டி சன் மார்க்கசபை 1951ல் நடத்திய கலை விழாவில் இவருடைய கன்னிப்படைப்பான 'விதியின் சதி' என்ற நாடகம் அரங்கேறியது. பத்துப்பேர் வரை இளைஞர்களைப் பயிற்றி அதனை மேடையேற்றிய போது அவருடைய தொலை நோக்குடைய பணியும் தொடங்கிற்று.

சமூகப் பணியாக நாடகம் அமைவதை விபுலானந்த அடிகளார் வருமாறு கூறியுள்ளார்.

"உயிர்க்கு உறுதி பயக்கும் மருந்தினை
உண்ணவிரும்பாத ஒரு
மகனுக்குச் சக்கரையினுட் பொதிந்து வைத்து
உதவுகின்ற அன்புடையாளன்
போல உயிர்க்குறுதி பயக்கும் உண்மையினை
நவரசங்களுட்
செறிந்து வைத்து உதவும் நீர்மையது
நாடகம். நாடகக்கவி தன்னை
ஒரு வைத்தியன் என அறிதல் வேண்டும்"

இக்கருத்தைப் பொன்னுத்துரை நன்கு உள்வாங்கியுள்ளார். மக்களை நன்னெறியிற் செலுத்த வேண்டும் என்ற எண்ணத்தை இவருடைய 'இறுதிப்பரிசு', 'கூப்பியகரங்கள்' 'பக்திவெள்ளம்' என்னும் நாடகங்கள் வெளிப்படுத்தின.

மாணவப் பருவத்தில் 'லோபியின் காதல்' என்னும் நாடகத்தில் லோபியாக நடித்துப் பலருடைய பாராட்டையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கலையரசு. க.சொர்ணலிங்கம் இவரைப் பற்றி வருமாறு கூறியுள்ளார்.

"இவர் முதல் முதலாக அநேக
வருடங்களுக்கு முன்பு பரமேஸ்வராக்
கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்தில் அங்கு
நடைபெற்ற
'லோபியின் காதல்' என்னும்
நாடகத்தில் லோபியாக
நடித்ததைப்
பார்த்ததும் இந்தப் பையன் ஓர்
காலத்தில் நல்ல குணசித்திர
நடிகனாக
வருவானென்று நான் வாழ்த்தியது
ஞாபகத்திலிருக்கிறது. பின்பு
பட்டதாரிப்
படிப்பை முடித்துக் கொண்டு
ஆசிரியர் ஆனதும் நாடகக்
கலையை வளர்க்க
வேண்டும் என்ற ஆவலுடன்
அத்துறையில் இறங்கினார். பல
நாடகங்களைத்
தாமே இயற்றித் தாமும் கூட
நடித்து அவைகள் மூலமாகப் பல
நடிகர்களையும்
உருவாக்கினார். இவரது
நாடகங்களில்
சுவையிருப்பதைக் கண்டு
அவைகளை
அடிக்கடி பார்த்துமிருக்கிறேன். இவருடன் கூட
றேடியோ-மேடை நாடகங்கள் சிலவற்றில்
நடித்துமிருக்கிறேன்"

ஏ.ரி.பொன்னுத்துரையின் கலைவாழ்வின் தடத்தை இனங்கண்டு கலையரசு அன்றே வியந்துள்ளார். நாடகக் கலையில் தனக்கென ஒரு வழிசமைக்கும் ஆற்றல் பொன்னுத்துரையிடம் மிக்கிருந்தது. எழுத்துத் திறமையும் கலைநுணுக்கமும் இவரிடம் மேலொங்கி

யிருந்தமையால் நீண்ட காலம் நாடகப் பணியை ஆற்ற முடிந்தது. ஈழத்து நாடகக் கலையுலகில் தனக்கென ஒரு சிறப்பிடத்தைத் தேடிக் கொண்டவர். பாடசாலை மட்டம், சமூக அரங்கு என்ற இருதளத்திலும் நாடகக் கலையை ஒரு மதிப்பார்ந்த புனிதமான கலையாக நிலைநிறுத்தியவர்.

பொன்னுத்துரையின் ஆங்கிலப் புலமை பல நாடக உத்திகளைக் கற்றறிவதற்கு வாய்ப்பளித்தது. ஈழத்துத் தமிழ் நாடகங்களை மேலைத்தேசத்து மேடை நாடகங்களின் உயர் நிலைக்கு நெறிப்படுத்த விரும்பினார். நகைச்சுவை நாடகங்களையும் தயாரித்து மக்களுக்குக் களிப்பூட்டினார். வரலாற்று நாடகங்களையும் மேடையேற்றினார். 'நிறைகுடம்' என்னும் இவருடைய வரலாற்று நாடகம் ஈழத்தின் பல பாகங்களிலும் மேடையேற்றப்பட்டது. காலத்தோடு இயைந்து நாடகங்களைத் தயாரிப்பதில் வல்லவர். அதனால், பல பரிசில்களையும் பெற்றுள்ளார். வானொலி நாடகங்களின் ஒலிபரப்பால் ஊடக நிலையிலும் இவர் நாடகக் கலையை மக்கள் சுவைக்கச் செய்தார்.

நாடகத்துறையில் மட்டுமன்றிக் கவிதை இயற்றுவதிலும் வல்லவராகப் பொன்னுத்துரை விளங்கினார். பாடசாலை விழாக்களிலும் பொது நிகழ்வுகளிலும் கவிதை நடையில் உரையாற்றும் திறனுடையவர். வரவேற்புரை, நன்றியுரை போன்ற உரைகளையும் கவிதையிலே நிகழ்த்தும் ஆற்றலுடையவர். அத்துடன் சிறந்த பாடகராகவும் விளங்கினார். 'கலைப்பேரரசு' என்னும் கௌரவப்பட்டம் இவருடைய ஆளுமையின் சின்னமாக உள்ளது. நாடகக் கலைஞர் ஏ.ரி.பொ. வின் கால் நூற்றாண்டுக் கலைப் பணியினைப் பாராட்டி 1974ல் ஒரு மலர் குரும்பசிட்டி சன்மார்க்க சபையால் வெளியிடப்பட்டுள்ளது. கலைவாழ்வில் அவருடன் தொடர்பு கொண்டிருந்த பலர் தமது கருத்துக்களை அதில் பதிவு செய்துள்ளனர். அவற்றில் பேராசிரியர் சுவித்தியானந்தனின் கருத்துப்பதிவு பொன்னுத்துரையின் பண்புநலனை நன்கு உணரவைத்துள்ளது.

> "பொன்முடிப்போடு முதன் முதல் என்முன் தோன்றியவர் பல்துறை நாடகக் கலைஞன் ஏ.ரி.பொன்னுத்துரை அவர்கள். இது நடந்து 12 ஆண்டுகள் ஆகி விட்டன. நடிகமணி வி.வி.வைரமுத்துவின் மயானகாண்டம் யாழ். நகரசபை மண்டபத்தில் நூறாவது தடவை மேடையேறிய போது அவரைப் பாராட்டுமுகமாகப்பொற்கிழியோடு மேடையிலே தோன்றிய ஏ.ரி. பொன்னுத்துரையின் அறிமுகம் கடந்த 12 ஆண்டுகளாக அவருடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியது. அவருடைய சிறந்த குணங்களில் என்னைக் கவர்ந்தது கலைஞரைப் பாராட்டும் பெருந்தன்மை. வைரமுத்துவுக்கு பொற்கிழி: கலையரசுக்குத் தேநீர் விருந்து, சானாவுக்குப் பட்டமளிப்பு என இவர் ஒழுங்கு செய்த பாராட்டு வைபவங்கள் பல கலைஞரின் படைப்புக்களைப் புகழ்ந்து அவர் எழுதிய விமர்சனங்கள் பல. இவ்வாறு பிறர் மகிழத்தான் இன்புறும் குணப்பண்பே 25 ஆண்டுக் கலைவாழ்வில் இவருக்குத் தனிச் சிறப்பை அளித்திருக்கின்றது."

கலைஞரின் உள்ளத்தை மகிழ்விக்கும் சிறந்த கலை உள்ளம் பொன்னுத்துரையின் உன்னதமான ஆளுமையெனலாம். தன் வாழ்வின் இறுதிக் காலம் வரை கலைஞரைத் தேடிச் சென்று பாராட்டும் பண்புடையவராக இருந்தமை குறிப்பிடத்தக்கது. கலையை வெறும் பொழுது போக்காக அவர் கருதவில்லை. வாழ்க்கைக்குத் தேவையான, வாழ்வை வளம்படுத்தும் ஒரு ஆற்றுகையாகவே எண்ணிச் செயற்பட்டார். கலைத் தொண்டு அவருடைய முழுநேரப் பணியாகவிருந்தது. நாடகக் கலை வரலாற்றில் அவருடைய தொண்டு ஒரு புதிய நெறியையும் தோற்று வித்தது.

<u>வானொலியில் புதிய பணியும் புதிய வழிபாட்டு மரபும்</u>

வீரகேசரி நிறுவனம் கலை விழாவைக் கொண்டாடிய போது ஏ.ரி.பொன்னுத்துரையின் 'அண்டல் ஆறுமுகம்' என்ற நாடகம் பலரையும் கவர்ந்தது. அக்காலத்தில் இவர் 'பஞ்சபூதங்கள்', 'தாளக்காவடி' என்னும் வானொலி நாடகங்களையும் எழுதினார். 1973 நவம்பரில் 'தாளக்காவடி' வானொலியில் ஒலிபரப்பப்பட்டுப் புகழைக் கொடுத்தது. ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க இருவாரங்களில் மீண்டும் ஒலிபரப்பப்பட்டது. இந்நாடகம் எழுதுவதற்கு 1944 ஆம் ஆண்டு தாளக்காவடி பழகி ஆடிய அநுபவத்தைப் பயன்படுத்தியுள்ளார். தாளக்காவடி ஆட்டுவது போலத் தாளம் தட்டி 'செல்வச் சந்நிதியிலே அமரும் பன்னிருகை வேலவனே தா' என்று பாடி "தகுட தீம் தகதா" என்பன போன்ற தாளக் கட்டுகளை அவரே உச்சரிக்க வி.வி.வைரமுத்து பிற்பாட்டுப் பாடி மெருகூட்டியுள்ளார். பலரும் அதைப் பாராட்டியபோது அவருடைய உள்ளத்தில் புதிய ஆற்றுகை மரபு உருவானது.





நாடகங்களை எழுதி, தயாரித்து, நடித்துப் பணி செய்த அவர் சிறுவருடைய பங்களிப்பாகத் தாளக் காவடி ஆட்டத்தைப் பயிற்றி அரங்கேற்ற விழைந்தார். வானொலி நாடகத்தில் குரலால் உயர்த்தப்பட்ட தாளக்காவடியை ஓர் கலை ஆடலாக அரங்கேற்ற எண்ணினார். முருக பக்தரான இவருக்குக் காவடியாடலில் தனியானதொரு விருப்பு இருந்தது. நேரடிக் காட்சியாக ஆடலும் பாடலும் இணைய தாளக்காவடி அரங்கேறிய போது புதியதொரு மரபு தோன்றியது.



நாடகத்தில் அண்ணாவியாராக ஏ.ரி.பி

காவடியாட்டம் வழிபாட்டுடன் தொடர்புற்றிருந்த ஒரு ஆடல் நிவேதனமாகும். தாளத்தோடு கூடிய ஆடலும் பாடலும் பக்தி பரவசத்தை ஏற்படுத்தியது. கந்தனுக்குக் காவடியாடலே சிறந்த நிவேதனமாகக் கருதப்பட்டது. ஈழத்திலே உள்ள முருகன் கோவில்களிலே காவடி நேர்த்திக்கடனுக்காக ஆடப்பட்டது. காவடியாட்டம் ஒரு கடவுள் வழிபாட்டு முறையாகப் பேணப் பட்டுள்ளது. புராணக் கதைகளிலே காவடியாட்ட த்தின் தோற்றம் பற்றிச் சில கதைகள் வழக்கிலுண்டு. பழனிமலைமீது காணப்படும் காவடி தூக்கிய நிலையில் உள்ள இடும்பனின் சிற்பம் இதற்குச் சான்றாக உள்ளது. ஆனால், 'காவடி' என்ற சொல்லை காவு + தடி எனப் பிரித்துப் பொருள் காணும் போது 'கட்டித்தொங்க விட்டுச் சுமத்தல்' என்ற விளக்கத்தைப் பெறலாம். முருகன் கோவில்கள் பெரும்பாலும் மலையிலே அமைந்திருப்ப தால் அங்கு வழிபாட்டுக்குரிய பொருட்களை கம்பின் இருமுனை களிலும் கட்டித் தொங்கவிட்டுச் சுமந்து செல்ல நேரிட்டது. இத்தகைய 'காவுதடியே' மருவி 'காவடி' என வழங்கப்பட்டி ருக்க வேண்டும். பெரிய சுமையைச் சுமந்து செல்லும் மனவுறு தியால் அதனைச் சுமக்கும் போது முருகன் புகழைப்பாடி ஆடிச் செல்லும் பக்குவம் ஏற்பட்டது. மனிதன் தன் வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பச் சுமைகளை மனத்திலிருந்து இறக்கு வதற்காக நேர்த்திக் கடனாக காவடி எடுக்கும் வழிபாட்டுச் செயற்பாடு தோன்றியது. மனச்சுமையைத் தீர்க்க காவடி எடுக்கும் வழக்கம் தோன்றியதால் அதனுடன் இசையும் இணைந்தது. தவில், நாதஸ்வரம், உடுக்கு, தாளம், பறை, நையாண்டிமேளம், ஒத்து போன்ற இசைக் கருவிகளும் இசைக்கப்பட்டன.

காவடியில் பலவகைகள் உள. பாற்காவடி, பன்னீர்காவடி, பூக்காவடி, பஞ்சாமிர்தக்காவடி, சர்க்கரைக்காவடி, சந்தனக் காவடி, சர்ப்பக்காவடி, இளநீர்க்காவடி, மச்சக்காவடி, பிள்ளைக் காவடி, அன்னக்காவடி, பிரதிட்டைக்காவடி, சேவற்காவடி, வேற்காவடி, செடிற்காவடி, குத்துக்காவடி, பறவைக்காவடி, தூக்குக் காவடி, அந்தரக்காவடி, துலாக்காவடி, தாளக்காவடி, தொட்டிற் காவடி என அவற்றை வகைப்படுத்தலாம். வழிபாட்டுப் பொருட் களைக் கொண்டு செல்லும் நிலையில் காவடி பயன்படுத்தப் பட்டதால் அப்பொருட்களின் பெயர்களும் இணைந்து நின்றன. உடம்பிலும், உதட்டிலும், நாவிலும், கன்னத்திலும் வேல்குத்தி எடுக்கப்படும் போது அது வேற்காவடி என அழைக்கப்பட்டது. முதுகிலே செடில்குத்தி எடுப்பது செடிற் காவடியாகும். காவடிகளை மாறி மாறி வைப்பது குத்துக் காவடி எனப்பட்டது.

கிராமியக் கோலங்களும் கலைத்து வமும் இணைந்த தாளக்காவடி ஏ.ரி. பொன்னுத்துரையின் கலைப் பணியை ஒரு புதிய வழியில் செல்லவைத்தது. காவடி ஆட்டத்துடன் இணைந்தபோது ஒரு தனியான தாளக்கட்டமைப்பும் இணைந்தது. அதனைப் பொன்னுத் துரை பேணுவதற்கு எண்ணம் கொண்டார். கிராமிய ஆடற்கலை மரபாக இருந்த தாளக்காவடியை மாணவர் மத்தியில் பரப்ப முயற்சி செய்தார். பாடசாலைகளிலே நடந்த கிராமிய ஆடற் போட்டிகளில் தாளக்காவடியும் இடம்பெறச் செய்தார். காவடி ஆட்டத்திலே பாடுவதற்காகத் தமிழிலே காவடிச்சிந்து எனும் இசைப்பாடல்கள் தோன்றியிருந்தன. சிந்து என்னும் இசைப்பாட்டு பெரும்பாலும் மூன்று சீர்களால் ஆனது. கழுகு மலையிலே எழுந்தருளியிருக்கும் முருகனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு சென்னிகுளம் என்னும் ஊரைச் சேர்ந்த அண்ணா மலைரெட்டியார் (1865 - 1891) முதன் முதலில் காவடிச் சிந்து பாடியுள்ளார். ஊற்றுமலை ஜமீன்தாரான இருதாலய மருதப்பதேவர் கழுகுமலை முருகனுக்குக் காவடி எடுத்துச் சென்ற போது பாடப்பட்டதாகக் கருதப்படுகிறது. 22 இசைப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. இதைவிடச் சிவஞான புரமுருகனுக்கு , uhkehj புரத்துப் பாண்டித்துரைத்தேவர் பாடிய 12 காவடிச் சிந்துப் பாடல்களும் உள. ஈழத்தில் சோ.பத்மநாதன் நல்லூர் முருகன் மீது பாடிய 12 பாடல்களும் உள்ளன.


முருகன் வழிபாட்டுத் தலங்களை விட ஏனைய வழிபாட்டுத் தலங்களிலும் காவடி ஆட்டம் பரவலாக்கம் பெற்றபோது அத னை ஒரு வழிபாட்டுப்பயிற்சி நெறியாகப் பொன்னுத்துரை பேணமுயன்றார். கூத்து அரங்குகளிலே தொடக்க ஆடலாகக் காவடியாட்டத்தை அவர் நடத்தும் மரபை ஏற்படுத்தினார். கோயில்களிலே நேர்த்திக் கடனுக்காகக் கூத்து ஆடப்படும் போது சிறுவர்களின் காவடி ஆட்டம் முதலில் நடக்கும். அது பார்வையாளரைப் பரவசப் படுத்தம். தும்பளை நெல்லண்டையம்மன் ஆலயத்தில் இத்தகைய சிறுவரின் தாளக் காவடியை இவர் அரங்கேற்றிய போது ஒரு பக்திச்சூழல் தோன்றப் பார்வையாளர் மெய்மறந்தனர். அதனை நேரில் காணும் வாய்ப்பு ஏற்பட்டது. சிந்துநடைக் கூத்தான 'காத்தவராயன்' அன்று ஆடப்பட்டது. அதற்கு வழிபாட்டுநிலையில் வாழ்த்தாகத் தாளக் காவடியாட்டம் அமைந்தது.

இன்று மலேசியா, சிங்கப்பூர், சுமாத்திரா போன்ற நாடுகளில் காவடியாட்டம் கோவில் திருவிழாவில் முக்கியமாக உள் ளது. புலம் பெயர்ந்த தமிழர் வாழுகின்ற மேலைத்தேச நாடுகளிலும் காவடி யாட்டம் நடைபெறுகிறது. தைப்பூசவிழாவிலே சிறப் பாகக் காவடி ஆட்டம் நடைபெறும். மலேசியாவில் உள்ள பத்துமலை முருகன்



கோயிலில் தைப்பூசத் தன்று பல்லாயிரக் கணக்கான காவடிகள் வரும். அவற்றுள் சிறுவர்களின் தாளக் காவடி கண்கொள்ளாக் காட்சியாக விளங்கும். பாடலும் ஆடலும் தாளமும் பக்தியும் இணைந்த நிலையில் தாளக்காவடியைக் கவின் கலைகளுள் ஒன்றா கக் காணமுயன்றவர் ஏ.ரி.பொன்னுத்துரை.

வழிபாட்டு நடைமுறைக்கு அப்பால் அதை ஒரு ஆடற் கலை மரபாக்க அவர் முயன்றார். ஏனைய மதங்களில் வழிபாட்டுமரபில் ஆடல் இணையவில்லை. பாடலே பக்தியுணர்வை ஊட்டியது. ஆனால் சைவ சமயத்தில் ஆடலும் இணைந்திருந்தது. இறைவனுடைய கோல அழகையும் அருளும் திறத்தையும் பாடல் மூலமன்றி ஆடல் மூலமாகவும் மக்கள் உணர வாய்ப்பிருந்தது. அதுமட்டுமன்றி இசைக் கருவிகளை இசைத்துப் பாடல்களைப்பாடி ஆடியபடி கோவிலை வலம் வந்து வணங்கும் மரபும் பேணப்பட்டுவந்துள்ளது. சிறுவர் முதல் முதியவர்வரை வழிபாட்டில் ஈடுபடுவதற்கு இது பெரிதும் உதவியது. ஆண், பெண் என்ற பாகுபாடும் இச்செயற்பாட்டில் கணிக்கப்படவில்லை. 'தாளக் காவடி' வழிபாட்டில் அனைவரையும் மெய் மறக்கச் செய்யும் ஆடல் மரபாக வேண்டுமென்பதே பொன்னுத்துரையின் வேணவா. சிறாருடைய செயற்பாடுகளை நெறிப்படுத்த வழிபாட்டுப் பயிற்சி இன்றியமையாதது. எனவே தாளக்காவடி ஆட்டத்தை அவர்களுக்குப் பயிற்றி ஆடலிலும் பாடலி லும் ஈர்ப்பு ஏற்படும் போது பக்தி ப்பரவசத்தையும் உணரவைக்கலாம் என அவர் நம்பினார். மருத்துவ ஆய்வுநிலையில் ஆடலும் பாடலும் நோய்களைக் குணமாக்கும் என முடிவுகள் வெளிவந்துள்ளன. இக்கருத்தை எமது வழிபாட்டுச் செயற்பாடுகள் முன்னரேயே உணர்த்திவிட்டன.



"கருணை முருகனைப் போற்றித் - தங்கக்
காவடி தோளின் மேலேற்றிக் - கொழும்
கனலேறிய மெழுகாய் வருபவர் எவரும் - இகமேதி
காணபார் இன்பம் பூண்பார்"

என்ற அண்ணாமலை ரெட்டியாரின் பாடலைப் பொன்னுத்துரை பாடித் தாளக்காவடி ஆட்டத்தைப் பயிற்றிய போது இம்மருத்துவப் பணியையும் செய்தார். பிஞ்சு மனங்களிலே உற்சாகத்தை ஏற்படுத்தி இறைவன் பற்றி எண்ணத்தைத் தொடரவைப்பதற்கு இதுவே சிறந்த வழியெனக்கண்டார். கோவில் வழிபாட்டில் காவடி இணைந்திருந்ததை விரிவாக மக்கள் அறிய அரங்குகளிலே காவடி ஆட்டத்தை இணைத்தார். ஆன்மீக உணர்வை ஊற்றெடுக்க வைத்து மக்களைப் பக்திவழியிலே செலுத்த அவர் தனது நாடகப்பணியைத் திசை மாற்றினார். நாடகத்தில் நடிப்புத்தேவை. ஆனால் தாளக் காவடியாட்டத்தில் மனம் ஒருவழிப்பட்டு வழிபாட்டுச் சிந்தனையோடு இருக்க வேண்டும். எமது சைவ சமயம் பரவுவதற்கும் நலியாதிருப்பதற்கும் பொன்னுத்துரை தன்னாலான ஒரு பங்களிப்பை நல்கியுள்ளார் என்றே கூறவேண்டும்.

எனவே, அருடைய நினைவைச் சுமக்கும் நிலையில் எமக்கும் ஒரு பணியுள்ளது. வழிபாட்டுப் பயிற்சியில் சிறாரை ஈடுபடுத்த தாளக்காவடிப் பயிற்சியை அவர்களுக்கு நல்க வேண்டும். குறிப்பாக, சைவசிறார் இல்லங்களிலே பராமரிக்கப்படும் சிறாருக்கு இப் பயிற்சி மிகவும் நன்மைதரும். நாடகப் பயிற்சி நெறியாளர்கள் எமது இசைப் பாக்களைப் பயன்படுத்திச் சமயம் வளர்த்த எமது சான்றோர்களின் வரலாற்றைத் தாளக் காவடி ஆட்ட நிலையில் சிறாருக்கு பயிற்ற வேண்டும். சிறாரின் இன்றைய பிணியான மனவடுக்களை அகற்ற இது ஒரு நல்ல மருந்தாகும். ஏ.ரி.பொன்னுத்துரையின் நாடகப்பணியை அவர் காட்டிய புதிய மரபிலே தொடர்வதற்கு இது ஒரு வழியாகும். இன்னும் எமது வழிபாட்டின் பக்திப்பரவச நிலையைப் பலரும் உணாவதற்கும் இது வாய்ப்பளிக்கும். வானொலியில் காற்றில் கலந்து வந்த தாளக் காவடியின் ஓசையைக் கூத்தரங்குகளிலே கேட்க வகை செய்யவேண்டும். இப்பணி ஏ.ரி.பொன்னுத்துரையின் தொண்டுப் பணியைத் தொடர்வதற்கு வழிவகுக்கும். அவர் வாழ்வும் வரலாறும் என்றும் அறியாதகோலமாய் நிலைத்து நிற்கும்.

## ஓராள் அரங்கக் களப்பயிற்சி



யாழ்ப்பாணம் திருநெல்வேலியை தலைமை இடமாகக் கொண்டு இயங்கி வருகின்ற செயல்திறன் அரங்க இயக்கத்தினால் நடாத்தப்படவிருந்த தனி ஆள் அரங்க போட்டி நிகழ்வுக்காக நடிகர்கள் தம்மை தயார்படுத்தும் முகமாக ஓராள் அரங்கக் களப்பயிற்சி நடைபெற்றது. இதில் திரு.ச.பாஸ்கரன் அவர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இப்பயிற்சி திருநெல்வேலி பால்பண்ணையடியில் உள்ள சித்தி விநாயகர் கல்யாண மண்டபத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை 27.06.2007, 28.06.2007 ஆகிய நாட்களாக நடைபெற்றது. இப்பயிற்சியில் 42 இளம் நடிகர்கள் பங்கு கொண்டனர். பயிற்சியில் முக்கியமாக தனிநடிப்புத் தொடர்பான விடயங்களைப் புதிதாகக் கற்றுக் கொண்டதோடு கலந்துரையாடி நடிகர்கள் தனித்தனியாக தங்களது திறமையை வெளிப்படுத்தியதோடு, குறிப்பாக தனி நடிப்புக்கான எழுத்துருவுக்கான அடிப்படைகள், தனி ஆள் ஆற்றுகையின் தெளிவான பார்வையாளர் தொடர்பு மற்றும் அரங்கினை நடிகர்கள் எவ்வாறு பயன்படுத்துவது போன்ற பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

ஆர். நவராஜ்

ஏ.ரி.பி இன் சிறுவர் நாடக எழுத்துரு

# மான்

*எழுதிய ஆண்டு - 1995*

திரை விலகுகிறது

(மேடையில் பல நிலையில் உள்ள நடிகர்கள் தொங்கி தொங்கி ஆடுகிறார்கள்)

பாடல்

தா சொணங்கிட தாதிங்க தத்திமி
தா சொணங்கிட தாதிங்க தத்துமி
தா சொணங்கிட தாதிங்க தத்திமி
தா சொணங்கிட தாதிங்க தத்துமி

ஒருவர்: *(பாலர் வகுப்பு பிள்ளைகள் பேசும் பாசையில்)* அப்புத்துரை மாஸ்டரை இன்னும் காணம்.

எல்லோரும்:- காணம்: காணம்: காணம்:
அவர்ரை சின்னையும் காணம்.
மாஸ்டரையும் காணம்
சின்னையும் காணம்

சிண்: இண்டைக்கு மாஸ்டர் வர மாட்டாராம்.

ஒரு: ஏன்? ஏன்?

சிண்: சின்ன accident ஆம் பெல்லும் இல்லை. பிறேக்கும் இல்லை. பறேட்டிலை வந்த மாதிரி பெட்டையள் ஐஞ்சு சைக்கிளில் வந்து இடிச்சு விழுத்திப்போட்டுதுகள்...
எங்களை நடிச்சுப் பழகச் சொன்னவராம் இண்டைக்கு பொறுப்பு என்ரை தலையிலை தான். சரிசரி நடிச்சுப் பாப்பம்

எடுத்துரைஞர்: இது ஒரு அடர்ந்த காடு. இதனூடாக ஒரு ஒற்றையடிப் பாதை *(பயமூட்டும் இசை)* அதாலே ஒரு வேட்டைக்காறன் நடக்கிறான்.

*(டேவிட் மிடுக்காய் நடக்கிறான்)*

அன்பாக வளர்த்து வந்த ஜிம்மி எண்ட நாயை குற இழுவையாக இழுக்கிறான். ஏதோ முணு முணுக்கிறான். முறுகுகிறான்.

டேவிட்: *(கோபமாக)* மிமி, சனியன், நன்றி கெட்ட நாய், துக்குறி, சுட்டுத்தள்ளப் போறன்.

எடுத்துரைஞர்: பல ஆண்டுகள் விஸ்வாசமாக வேட்டைக்கு உதவிய நாயை சுட்டுத் தள்ள இழுத்து வாறான். காரணம் வீட்டில் நடந்த நடந்த ஒரு சிறு சம்பவம்.....
வீட்டில் 'ஜிம்' குந்தியிருக்கிறது. எழுந்து நிற்கிறது. வள்! வள்! வள்!

*(படலையடிக்கு யோன் வருகிறான்.)*

யோன்: என்ன? ஒன்பது மணியாச்சு, படலை பூட்டிக்கிடக்கு. *(கூர்ந்து பார்த்தபின்)* அடடா! பூட்டின மாதிரிச் சாத்திக்கிடக்கு! ஆ!....

ஜிம்மி: *(குலைக்கிறது)* வள்! வள்! வள்! வள்!
இந்தாள் கள்ளன் மாதிரிக் கிடக்கு
வள்! வள்! வள்! வள்!
களவெடுக்கத்தான் 'கேற்றை' கடந்து வாறான். வள்! வள்! வள்! வள்!
*(பாய்ந்து பாய்ந்து)*
வள்! வள்! வள்! வள்!

யோன்: டேவிட்! *(உச்சு)* டேவிட் நாயைப் பிடியப்பா. காலுக்கை வந்திட்டுது. சனியன். கடிச்சிட்டுது. ஐயோ.. அனியாயம். லோங்ஸ்சையும் கிளிச்சிட்டுது.
ஆ... ஆ....

டேவிட்: *(ஓடிவந்து)* யோன்! யோன்! குறை நினைக்காதை காலிலை இரத்தமும் கசியுது. ஏதோ மருந்தும் கொஞ்சம் கிடக்கு கட்டுறன். சீ சனியன் இந்த ஜிம்மி செய்த வேலை. கிறகம்.

டேவிட்: தற்சேலா இப்பிடி நடந்திட்டுது. கோவியாதை யோன்!

யோன்: இப்பிடி வெறி நாயளையும் வீடு வாசலில் வளக்கிறியள்.. உங்கடை மூளை...

டேவிட்: கடிச்சிட்டு பதுங்குகிறா? (அடித்தல்) வள்! வள்! வள்ளு; (சப்தம்) என்ன செய்யுறன் பார்.

யோன்: எனக்கு கடிச்ச மாதிரி இன்னும் எத்தினை பேருக்கு தீட்டுகுதோ?

டேவிட்: அவர் இனி உயிரோடை இருந்தாதானே! சுட்டுத் தள்ளப் போறன்.

யோன்: சரியா நோகுது. டேவிட் அப்ப போட்டு வாறன்.

எடுத்துரைஞர்:
துவக்கை எடுக்கிறான்.
சங்கிலி எடுத்து ஜிம்மி
கழுத்திலை மாட்டுகிறான்
அடுத்து என்ன நிகழுமோ?

டேவிட்: நன்றி கெட்ட கிறகம் சனியன். நல்லது - கெட்டது - தெரியாத முண்டமே! உன்ரை உயிர் எடுப்பன்.

பாட்டு:

நல்லது கெட்டது தெரியாத
முண்டமே உன்தன் உயிர்
எடுப்பன் - நான்
உந்தன் உயிர் எடுப்பன்
எந்தனின் நண்பனை
என்வீட்டில் கடித்ததால்
மதிப்பு மரியாதை
தானும் இழந்தன்
வீட்டுக்கு வருவோர்க்கு
இன்முகம் காட்டிடு

பண்பாக வரவேற்று
பானம் கொடுத்திடு
பகிர்ந்துமே குடித்திடு
பாசத்தை வளர்த்திடு
என்றல்லோ என் அன்னை
அன்று உரைத்தாள்

*(வசனம்)*

துக்குறி! கடிச்சு இரத்தமும் வரப்பண்ணிப்
போட்டியே! சரியான முறையிலை
வரவேற்க தவறினேன். கிறகம், உன்னை...

பாட்டு:

சுடுவேன் சுடுவேன் நீயும்
பாட்டத்தில் விழுவாய்
'வள் வள்' என்று நீ
துடிதுடித்து சாவாய்
செம்மறியே நீ
செத்து மடிவாய்
துக்குறி நீ செய்த வேலைக்கு
வேலைக்கு... பதிலடி வேறென்ன?

ஜிம்மி: *(சோகமாக)*
நல்லது கெட்டது தெரியாதவன்
என்று நாவிறல் பேசுகிறீர்.
'சுடுவேன் சுடுவேன்' என்று
கோபத்தை கக்குறீர்.
கங்கணம் கட்டுகிறீர்
எத்தனை வேட்டையில் ஆபத்து
வேளையில் உதவிகள் நான் புரிந்தேன்
உயிரை வெறுத்துமே
உங்களைக் காத்திட
கடமை புரிந்து நின்றேன்.

*(டேவிட் உறைநிலையில் நிற்றல்)*

ஜிம்மி: என்னைச் சுட்டுக் கொல்ல இந்த நன்றி
கெட்ட மனிதன் திட்டம் தீட்டி விட்டான்.
சுய நலக்காரன்! நன்றி கெட்ட பிறவி நான்
ஏன் சாகவேணும். இப்ப செய்யத் தக்கது
என்னை நானே காப்பது தான்
'அவலத்தில் தற்பாதுகாப்பு அவசியம்.
அவசியம்' எப்படிச் சரி என்னை நான்
காப்பாற்றுவம்...

*(உறைநிலை. யோசனை செய்கிறது)*

எடுத்துரைஞர்:

ஜிம்மிக்கு அதிஷ்டம்! அதிஷம்!
சங்கிலியோடை இணைக்கப்பட்ட நாயின்
கழுத்துப் பட்டை நெகிழ ஆரம்பிச்சிட்டுது.
கழுத்துப் பட்டை சரியான பழசு. மழை
வெய்யில் பட்டு பட்டு, உக்கி இத்துப்
போச்சு. அறுந்து போம் போலை. என்ன
அறப்போகுது. அறுகுது. அதிஷ்டதேவதை
ஆடுகிறாள்.

*(அதிஷ்ட தேவதை மூன்றுபேர் ஆட்டம் - ஆங்கில இசை)*

பாட்டு:

அதிஷ்டம் அதிஷ்டம் அதிஷ்டமாம்
ஆகா ஜிம்மிக்கு அதிஷ்டமாம்
அதிஷ்ட தேவதை ஆடுகிறாள்
அன்பாய் தழுவிக் கூடுகிறாள்

லாலாலால லால லா
லால லால லல லா
லால .ல லால லாலலா
லல்ல லல்ல....

அதிஷ்டம் அதிஷ்டம் அதிஷ்டம்
ஆகா ஜிம்மிக்கு அதிஷ்டமாம்
அதிஷ்ட தேவதை ஆடுகிறாள்
அன்பாய் தழுவிக் கூடுகிறாள்

ரிங்ரொங் ரிங்ரொங்
ரிங்ரொங் ரொஸ்
கிறுதக் கிறுதக்
ரிங்ரொஸ் ரொஸ்..

கழுத்துப் பட்டை கழண்டுது
ஆகா ஜிம்மிக்கு ஆனந்தம்
இந்தா போகுது பாய்ந்தடா
இனிநான் ராஜா என்றடா

*(வசனம்)*

ஓடுவம் ஓடுவம் ஓடுவம். ஒருமாதிரியாய் தப்புவம்.

*(ஜிம்மி இசைக்குத் தக்க ஓடுகிறது.)*

டேவிட்: என்ன? சங்கிலி நிலத்திலை கிடக்கு.
ஜிம்மி ஓடுகுது. ஜிம்மி! நில். தப்ப
பார்க்கிறியா? நில் எண்டா நில்!

*(ரிங் ரிங் ரிங் ரிங் ரிங் என்ற ரியூனுக்குத்தக்க ஜிம்மி ஆடி ஓடுகிறது.)*

*(வேட்டைக்காரன் துரத்துகிறான்.)*

அதிஷ்ட தேவதைகள்:

அதிஷ்டம் அதிஷ்டம் அதிஷ்டமடா
ஆகா ஜிம்மிக்கு அதிஷ்டமடா

டேவிட்: நில் தப்ப பாக்கிறியா? (உரத்து) ஜிம்மி
நில். நில்றா. உடனை நில். இல்லை.
சுட்டுத் தள்ளுவன். துப்பாக்கிச் சூட்டுக்கு
பலியாவாய்.

*(ஓட ஓட டேவிட் துரத்துதல் Music)*

ஜிம்மி: (C.R) வந்து ஆ! ஆ! ஏலாது, ஏலாது.
கொஞ்சமும் ஓடேலா களைக்குது. நல்லா
களைக்குது. காலடி எடுத்து
வைக்கேலாதாம் சுட்டு சாகக்
கொல்லட்டும்.. நான் என்ன செய்ய...

*(கழைத்து நிற்றல்)*

டேவிட்: வளமாய் ஆப்பிட்டிருக்கிறாய். தப்பேலா.
போக்கிரி. துக்குறி. இந்த கணமே நீ சரி.

*(துப்பாக்கியை ஜிம்மிக்கு நேரே பிடிக்கிறார். சுட ஆய்த்தம். பார்வையில் மாற்றம். சிந்தனை)*

என்னது? *(ஆச்சரியமாக)* ஜிம்மிக்கு பின்னாலை ஒரு சின்ன மான்குட்டி குளத்து தண்ணியுக்கை தவிக்குது. எதிர்ப்பக்கத்திலை தாய் மான் துடிக்குது.

தாய் மான்:
பாட்டு:

அம்மா! அம்மா! என்றழைப்பாய்!
அரவணைத்துமே நான் மகிழ்ந்தேன்
'புள்ளி புள்ளி' உந்தன் அழகு உடல்
'பூ' போல் மெல்லிய நல்ல உடல்
தம்பி! தம்பி! கவனம் என்றேன்
கெம்பி கெம்பி நீயும் சென்றாய்
தண்ணிக்கு கிட்ட போகாதே
தடுத்து நின்றேன் கேட்டாயா?
தாயின் மொழியை தட்டாதே
என்ற மொழியை வெட்டி நின்றாய்
குட்டையில் வீழ்ந்தாய் தவிக்கின்றாய்
ஏது மறியேன் என் செய்வேன்.

டேவிட்: *(உரத்த குரலில்)* என்ன தப்பு கணக்கு போட்டிட்டேன். சாகிற தருணத்திலை கூட இந்த நாய்-ஜிம்மி- நன்மை செய்திருக்கு.

இந்த இடத்திலை ஒரு மான்குட்டி நிற்கிறதை மோப்பம் பிடிச்சு அறிஞ்சு, உடனை என்னை இங்கை இழுத்து வந்திருக்கிறாய். இதுக்குத் தான் சங்கிலியை கழட்டிக் கொண்டு இந்தப் பக்கம் ஓடி வந்தாய். எனக்கு நன்மை செய்ய எண்ணினாய். என்னிடத்திலை இத்தனை விஸ்வாசம். துப்பாக்கியாலை சுட்டு கொல்லப் பாத்தேனே. எவ்வளவு மடமைத்தனம்

ஜிம் நடந்ததை மறந்துவிடு நீதான் என்ரை உயிர் நண்பன். வா வா. உண்மையான விஸ்வாசி.

இந்த குட்டையில் நிரம்பத் தண்ணீர். ஆழமோ தெரியாது. இறங்கி மான் குட்டியைத் தூக்குவம் *(தூக்கியபடி நிற்றல்)*

தாய் மான்:
பாட்டு:

தாய் சொல்லைத் தட்டினாய்
தண்ணியுள் வீழ்ந்தாய்
தத்தளித்தாய் நீ

தவியாய் தவித்தேன். தம்பி! தம்பி!

*(இப்போ)*

அன்னியன் கையில் அகப்பட்டாயே
அடிமை வாழ்வில் வீழ்ந்திட்டாயே
மானே! தேனே! எந்தன் மைந்தா!
மானமிழந்த வாழ்வொரு வாழ்வா?

ஜிம்மி: ஆ! அந்த தாயின் தவிப்பு! இந்த குட்டி மான் தாயிடம் இருந்து பிரிக்கப்பட நானும் ஒரு விதத்தில் காரணம் தான். என்ன நான் செய்ய. சுதந்திரத்தை கெடுக்கிறது பெரிய பாவம்.

*(மானை இழுத்தபடி டேவிட் ஆனந்த ஆட்டத்தில ஜொல்லியாய் போகிறான்.)*

ஜிம்மி: *(தனக்குள்)* உலகம் தெரியாத பச்சைப் பாப்பா. இந்த மனிதன் ஏதுக்காக உன்னைத் தூக்கி செல்கிறான். எண்டு தெரியுமா? பெரிய தோட்டமும் பெரிய மதிலும் உள்ள இடத்திலை உன்னை அடைக்கப் போகிறான்.

நீ புல்லைத் திண்டு தாராளமாய் உண்டு கொழுத்த பிறகு, உன்னை வெட்டிச் சமைச்சு, நண்பரோடை சாப்பிட்டப் போறான். உனக்கெங்கே இதுகள் தெரியப் போகுது! கள்ளம் கபடம் இல்லாத அப்பிராணி!

வேட்டைக்காரன் நடை:

தகனக சொம் சொம்
தித்தா தித்தை...

*(வசனம்)*

என்ரை பெரிய தோட்டம் அதோ! அதுக்கை மான்குட்டியரை அடைப்பம். கொஞ்ச நேரத்திலை மதில் சூழ்ந்த புல்லுத் தோட்டத்திலை இவரை...

*(மெல்லிய இன்ப இசை) (மாற்றம்)*

மான்குட்டி: உன் பெயரென்ன? எப்படிக் கூப்பிட

நாய்: ஜிம் என்று கூப்பிடும்

மான்: நீ எனது நண்பனா? விரோதியா? அம்மா சொல்லு வா விரோதிகளோடை கூடாதை எண்டு.

நாய்: பெரியவை அனுபவ சாலியள். அவை சொல்றது சரியா இருக்கும்.

மான்: நீ எனக்கு..

நாய்: நண்பராய் இருப்பன். உன்னிலை தனிவிருப்பம்.

மான்: இப்படிச் சொல்லும்போது கண்ணிலை நீர் ததும்புகிறதே.

நாய்: நீர் இந்த தாழ்ந்த நிலைக்கு சுதந்திரமற்ற நிலைக்கு வர நானும் காரணமாயிட்டன் எண்டுதான்...

*(ஓரத்தில் நிற்கிறது)*

*(மான் துள்ளுகிறது.)*

மான்: ஆ! கத்தை கத்தையா வளர்ந்த புல்லு! பச்சைப் புல்லு! பாக்கப் பாக்க...

தாலல்ல லாலா தாலாலல்ல லல்ல
தாலல்ல லாலா தாலாலல்ல லல்ல
தாலல்ல லாலா தாலாலல்ல லல்ல
தாலல்ல லாலா தாலாலல்ல லல்ல
ரிங் ரிங் ரிங் ரிங் ரிங்

ரிங்கிட ரிங்கிட ரிங் ரிங்
ஆ! செளித்து வளர்ந்த புல்லு
கொழுத்து வளர்ந்த புல்லு! நல்லா
சாம்பிடலாம்

*(சாப்பிடுகிறது)*

ஜிம்மி: வஞ்சக மில்லாத பிறவி. புல்லுக்கை துள்ளி துள்ளி சாப்பிடுகுது தான்! ஒரு அடிமை எண்ட எண்ணமே இல்லை.

மான்: *(ஓடி நின்று)* குழைச்ச புல்லு! *(பாய்ந்து நின்று)* சடைச்ச புல்லு! விரும்பின மாதிரி சாப்பிடலாம். வயிறு முட்ட சாப்பிடலாம்.

பாட்டு: அடடா! சொர்க்கம்! சொர்க்கம்!
இதுவே வாழ்வின் இன்பம்!
இன்பம் இன்பம் இன்பம்
ஈடில்லாத இன்பம்...

*(ரியூன் நடக்கிறது)*

ஜிம்மி: இதுவா சொர்க்கம்? வயிற்றுக்கு சோறும் தண்ணீரும் கிடைத்து விட்டால், சலுகைகள் கிடைத்தால் வாழ்க்கை சுவர்க்கமாகிவிடுமா?

மான்: அந்தா சடைச்ச புல்லு!
அச்சா! புல்லு புல்லு!
ஆனமட்டும் உண்பன்
ஆகா எண்டு கொழுப்பன்.

ஜிம்மி: நாலு சுவருக்கை அடைபட்டு வாழ்வதும் ஒரு வாழ்வா? பிறந்த மண்ணிலை இருக்கிற இன்பம் இங்கை கிடைக்குமோ?

மான்: ஜிம்மி என்ன கடுமையா யோசிக்கறா?

ஜிம்மி: உன்ரை அவல நிலை பற்றித் தான் யோசிக்கிறன்.

மான்: என்ரை வாழ்வு அவலமா? சொர்க்கமல்லோ? இந்தப் பால் நிலவிலை விளையாடுவம் வா.

ஜிம்மி: இந்த நிலையிலை விளையாட்டா? சிலவேளை உனக்கு நன்மை செய்யும். விளையாட்டும் உதவலாம். நான் ஓடுவன். ஓடுறமாதிரி நீயும் ஓடு. பாயுற மாதிரி பாய்.

**(ஜிம்மி + பாடகர்கள்)**

ஓடு ஓடு வேகமாக ஓடடா!
விறு கொண்டு ஓடிஓடி பாயடா

மான்: ஓடுறதா? சரி.... பாப்பம்

**பாடகர்கள்:**

துள்ளி துள்ளி பாய்கிறது மான்குட்டி
துடிதமாக ஓடுகிறது மான்குட்டி

*(பாய்கிறது. விழுகிறது. இசைக்கு இசைவாக)*

மான்: ஏலாது. ஏலாது

ஜிம்மி: முயன்று முயன்று முயன்று
நீயும் பாரடா!
இந்த மதில் மேலே
ஜிம்மி நானும் தானடா!
வேகமாக ஓடிப்பாய்
முயன்று பாய்..

மான்: என்ன உவ்வளவு உயரத்துக்கு ஒரே மூச்சிலை பாய்ச்சலிலை பாய்சிட்டா. நீ விண்ணன் தான்.

ஜிம்மி: *(மதிலில் இருந்தபடி)* உன்னாலையும் இஞ்சை வர ஏலும். ஓட்டமாய் வந்து ஒரே மூச்சிலை பாய்.

பாட்டு: முயற்சி திருவினை ஆக்குமடா
முழு மூச்சாய் ஓடிவந்து நீ சேரடா

மான்: சரி தெண்டிப்பம்

*(பாய்கிறது. விழுகிறது)*

ஐயோ! ஐயோ! உம் உம்.
என்னாலை ஏலாது.

ஜிம்மி: 'ஏலும் ஏலும்' என்று சொல்லி பீறடா!
ஏற்றம் அடைவாய் நீயும் தானடா.
ஓடு ஓடு வேகமாக ஓடடா!
ஒரே பாய்ச்சலில் மதில்மேலே ஏறிடடா

மான்: ஐயோ! பட்டது போதும். வேண்டாம் வேண்டாம் என்னாலை முடியாது.

ஜிம்மி: முயற்சி திருவினை ஆக்குமடா
முழு மூச்சாய் ஓடி வந்து சேரடா!

*(மான் பாய்கிறது. தெண்டிக்கிறது. விழுகிறது. எழுகிறது)*

மான்: போதும். போதும். இனி இந்த எண்ணமே வேண்டாம்.

ஜிம்மி: உசார் உசார் உசாராக
தொழிற்படடா! உயர்
வடைவாய் உண்மை
உண்மை உண்மையடா!

மான்: பாப்போமே...

*(தொடர்ந்து பாய்தல் விழுதல்)*

இரண்டு தடவையும் படுதோல்வி. ஏலாது. ஏலாது. ஏலவே ஏலாது

ஜிம்மி: வெற்றி வெற்றி இந்தமுறை வெற்றியடா
வீண்போக விடாமுயற்சி தானுமடா
ம்.. ஓடு - பாய் -
ஓடு - பாய்

மான்: சரி இந்த முறை பாப்பம். வீர உணர்வு எந்தனிடம் பீறுதடா ட அட
சூரதன சாதனை புரிய ஏவுதடா!

(ஜிம்மி + பாடகர்கள்)

ஓடு ஓடு ஓடு ஓடு பாயடா
மதில் மேலே வெற்றிக் கொடி நாட்டடா
பிறந்த பூமி அந்தப் பக்கம் தானடா
சிறந்த வாழ்வு வாழ சுற்றம் தேடுதடா.
காடு அதோ காடு அதோ தானடா
கட்டறுத்த காளை போல ஓடடா
வெற்றி வெற்றி என்ற கோஷம் போடடா

- திரை -

# ஏ ரிபி விருது பெறும் நவாலியூர் நா.செல்லத்துரை

- மஹா

கலை உலகில் சங்கமிக்கும் கலைஞர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையினர். சில கலைஞர்கள் பயிற்சியினால் உருவாக்கப்படு கின்றார்கள். சில கலைஞர்கள் இயல் பாக உருவாகின்றார்கள். பயிற்சியி னால் உருவாக்கப்படும் கலைஞர்களின் வளர்ச்சி, ஓர் எல்லைக்குட்பட்டதாக அமைந்துவிடுகின்றது. ஆனால், தாமாக உருவாகும் கலைஞர்களின் வளர்ச்சி, குறித்த எல்லையையும் தாண்டி, பரந்து விரிந்து நிற்கின்றது. விருட்சமாகி, சுதந்திரமாகக் கிளை பரப்பி நிழல் கொடுக்கின்றது. இக்



இந்தமண் எங்களின் சொந்தமண் நாடகத்தில் எல்லாளன் பாத்திரத்தில் நாவாலியூர் நா. செல்லத்துரை

கலைஞர்கள் ஒரு துறையில் மட்டுமன்றிப் பன்முகப்பட்ட துறைகளிலும் தம் ஆற்றல்களை வெளிப்படுத்துகின்றார்கள். அந்த வகையில் நவாலியூர் நா.செல்லத்துரையின் கலை வாழ்வு பற்றிச் சிந்திப்பது அவசியமானது.

ஏராளமான கலைஞர்களைப் பெற்றெடுத்த யாழ்ப்பாணம் நவாலியூரில் 06.01.1929 - இல் பிறந்த இவர், ஒரு கலைப்பட்டதாரி. 1959 தில் இருந்து கண்டி திரித்துவக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இவருடைய தமையனார் முருகேசு ஒரு சிறந்த ஆர்மோனியக் கலைஞர். நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களது இசை நாடகங்களுக்கு ஆர்மோனியம் வாசித்தவர். நவாலியூர் நா.செல்லத்துரை தனது ஆசிரியப் பணியுடன் நாடகப் பணியையும் மேற்கொண்டு வந்தவர். கண்டியிலும் அதனைச் சூழவுள்ள இடங்களிலும் நாடகங்களை எழுதி, நெறியாள்கை செய்து, நடித்து மேடையேற்றியுள்ளார். ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்று 1984-இல் யாழ்ப்பாணத்திற்கு மீளவும் வந்த இவர் தொடர்ந்தும் தனது நாடகப் பணியை முன்னெடுத்தார்.

தனது பாடசாலைக் காலத்தில் கொழும்பு செயின்ஜோன்ஸ் கல்லூரியில் உயர்தரக் கல்வி பயின்று கொண்டிருக்கும் போது 'த டிக்ரேட்டர்'



பூதத்தம்பி வீடியோப் படத்தில் பூலோக சிங்கர் பாத்திரம். டச்சுப் பாதிரியாராக சி.வி.கே.சிவஞானம்

என்ற ஆங்கில நாடகத்தில் சர்வாதிகாரியாக நடித்துப் பாராட்டுக்கள் பெற்றார். இதுதான் இவரது முதல் அரங்க அனுபவம். இதிலிருந்துதான் தானும் நாடகம் எழுதலாம், நடிக்கலாம் என்ற உணர்வு ஏற்பட்டு நாடக உலகிற்குள் உள் வாங்கப்பட்டார்.

இவர் எழுதி, நெறியாள்கை செய்த நாடகங்களில் பெரும்பாலானவை, சமூக நாடகங்கள். சமூகத்தில் நிலவியிருந்த சீர்கேடுகளையும், சாதி, இனமதப் பிரச்சனைகளையும், குடும்பப் பிரச்சனைகள், சீதனம் முதலிய சமூக ஒழுக்கக் கேடுகளை மையமாகக் கொண்டு, சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் எழுந்தவை. ஏனையவை புராண சரித்திர இலக்கிய நாடகங்கள். இவரது நாடகங்களில் மயானம் காத்த மன்னன், நீதி கேட்டாள் சோழ நாட்டாள், அன்பு இல்லம், உலகம் எங்கள் கைகளிலே, கண்டியம்பதிக் காவலன், புதியதொரு உலகம், எதற்கும் ஒரு தீர்ப்பு, குடும்பங்கள் பலவகை இது ஒருவகை, பட்டமரம் முதலிய நாடகங்கள் குறிப்பிடக்கூடியன.

பாடசாலை மாணவர்களை ஆற்றுகையாளர்களாகக் கொண்டு, பாடசாலைகளைத் தனது ஆற்றுகைக் களங்களாக அமைத்திருக்கின்றார். அந்தவகையில் கொழும்பு செயின்ற் பேனாலற்ஸ், கொன்வென்ற், யாழ்/பெரியபுலம் மகாவித்தியாலயம், யா/கன்னியர் மட மகாவித்தியாலயம், யா/சுண்டுக்குளி மகளீர் கல்லூரி, யா/இந்து மகளீர் ஆரம்பப் பாடசாலை, யா/வட்டுக்கோட்டை

யாழ்ப்பாணக் கல்லூரி, உடுப்பிட்டி மகளீர் கல்லூரி, யாழ் பொஸ்கோ பாடசாலை, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி போன்ற பாடசாலைகளைக் கூறமுடியும்.

இவர் நாடகத்தில் மட்டுமல்லாது தமிழ் சினிமாவிலும் தனது ஆர்வத்தைக் காட்டியுள்ளார். ஜெயீந்திரா மூவிசாரின் "காத்திருப்பேன் உனக்காக" எனும் திரைப் படத்தில் தந்தைப் பாத்திரமேற்று குணசித்திர நடிகராகத் தோன்றி யுள்ளார். இத்திரைப் படத்தில் இவர் நடித்ததோடு படத்திற்குரிய கதை, வசனம், பாடல்களை இவரே எழுதியுள்ளார். புலவர் செ.தெட்சணா மூர்த்தி எழுதி, தயாரித்த "பூதத் தம்பி" என்ற வீடியோப் படத்திலும் பூலோகசிங் கராக நடித்துள்ளார்.

கிறிஸ்தவரான இவர் வானொலியில் கிறிஸ்தவ நிகழ்வுகளில் நாடகங்களை நடித்திருக் கிறார். பேராசிரியர் நந்தி "பூமியிலே சமா தானம்" என்ற வானொலி நாடகத்தில் இவருடன் இணைந்து நடித்துள்ளார். "மயானம் காத்த மன்னன்" நாடகத் தில் அரிச்சந்திர னாக நவாலியூர் செல்லத்துரையும் விசுவாமித்திரராகப் பேராசிரியர் நந்தியும் நடித்திருக்கின்றனர். சி.வி.கே சிவஞானம், வ.சந்திரசேகரம் போன்றோரும் இவருடன் இணைந்து நடித்துள் ளார்கள்.



நவாலியூர் செல்லத்துரை ஒரு நடிகனாக, நெறியாளனாக, நாடக எழுத்தாள னாக விளங்குகின்றார். 'உலகம் எங்கள் கைகளிலே' எனும் நாடகத் தொகுப்பு நூல் ஒன்றினையும், 'சின்னவனா பெரியவனா' என்ற சிந்துநடைக்கூத்து நூல் ஒன்றையும் நாடகம் சம்பந்தமாக எழுதியுள்ளார். பாரம்பரிய சிந்து நடைக் கூத்திலே ஆர்வம் கொண்டிருந்த இவர் தாவீது கோலியாத் கதையினைச் சின்னவனா பெரியவனா என்னும் பெயரிலும் பஞ்சபாண்டவர் கதையை சூழ்சியும் வீழ்ச்சியும் எனும் பெயரிலும் சிந்துநடைக் கூத்துக்களாக எழுதி, வெளியிட்டு, மேடையேற்றியி ருந்தார்.

இவருக்கு வழங்கப்பட்டுள்ள பட்டங் களுள் கலைஞானச்சுடர், கலை மாணிக்கம், நடிப்பிசைத்திலகம், சர்வகலா வல்லவன், கலைமதி போன்றவை குறிப்பிடத்தக்கன. 1968ம் ஆண்டு இவருக்கு இலங்கை அரசி னால் வழங்கப்பட்ட சாகித்யமண்டல விருதும் 1998-இல் கலாபூசணம் விருதும், 2004-இல் முதுகலைஞர் விருதும், தற்போது 2007-இல் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத் துரை விருதும் இவர் பெற்றுள்ளார்.



நா.செல்லத்துரை

கலாபூசணம் நவாலியூர் நா.செல்லத்துரை 78 வயதிலும் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி வருகிறார். தற்போது சிறு நாடக முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றார். நாடகத் துறையில் தனக்கென ஒரு பாணியை அமைத்து நடிகனாக, நெறியாளனாக, எழுத்தாளனாக, பல்பரி மாண ஆளுமையை வளர்த்துக் கொண்ட நவாலியூர் நா.செல்லத்துரை மக்கள் மத்தியி ஒரு ஆசிரியனாக அல்லாமல் ஓர் கலைஞ என்ற பதிவையே ஏற்படுத்தி யுள்ளது. கலையே உயிர், கலையே வாழ்வு என்று தம்மைத் தியாகம் செய்து வாழ்ந்த பெரும் கலைஞர்கள் உலகுக்குத் தெரியாமல் இலை மறைகாயாக மறை ந்து போனார்கள். அதனால் அவர்கள் செய்த சேவை பற்றித் தெரி யாமல், அவர் களின் வரலாறு புரியாமல் அவர்களின் உண்மையான உழைப்பை அறியாமல் நம் சந்ததி இருக்கிறது. காரணம் அவர்கள் தம செயற் பாடு களை ஆவணப் படுத்தாமையும், தம்மைப் பிரபல்யப்படுத்த விரும்பாமையும் அவர்களின் அலட்சியப் போக்கும் ஆகும். ஆனால், செல்லத்துரை அவர்களைப் பொறுத்த வரை தனது சின்னச் சின்னச் செயற்பாடுகளைக் கூட சிறந்தமுறையில் ஆவணப்படுத்தி தன்னை வெளிப்படுத்தி வந்தமையால் இன்று வெளி உலகிற்குத் தெரிகின்றார். இவருக்குக் கிடைத்த கலாபூசண விருது கூட இவர் மக்கள் மத்தியில் தன்னை வெளிப்படுத்திய விதமும் ஆவணப்படுத் தலின் விளைவுமாகும்.

எனவே, ஒவ்வொரு கலைஞனும் தனது சேவை பற்றி அலட்சியப் போக்கில் இருந்து விடாமல் வருங்காலச் சந்ததியினரின் நன்மை கருதி அனைத்துச் செயற்பாடு களையும் உரிய முறையில் ஆவணப் படுத்திப் பாதுகாத்தல் அவசியம் என்பது தெளிவாகின்றது.

ஒரு மூத்த கலைஞரான ஏ.ரி.பி அவர்களின் விருது உரியவரொரு வருக்கு வழங்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி யைத் தருகிறது. ஏ.ரி.பி விருதுக்குழுவில் நாடகத்துறை சார்ந்தோர் இல்லாததன் காரணமாக கடந்த ஆண்டு முகமனுக் காக விருதுகள் வழங்கப்பட்டதும் இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.



# சொபொகிளிஸின் "அன்ரிகனி" தமிழில் இ.முருகையனின் "கர்வபங்கம்"

காலத்துக்குக் காலம் நம் கல்வி முறையில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பாடநெறிக்குமான புதிய பாடத்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு, புதிய விடயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. கல்வி முறையில் மாற்றங்கள் நிகழ்ந்து, பாடநெறிகளுக்குரிய பாடத்திட்டங்கள் மாறும்போது அதில் அறிமுகமாகும் புதிய விடயங்கள் பற்றிய பரிபூரண விளக்கத்தை மாணவருக்குக் கொடுக்கக் கூடியவகையில் அவை சம்பந்தமான நூல்களும் சஞ்சிகைகளும் ஆக்கப்பட்டு வெளிவருவது வழக்கம்.

அந்த வகையில் 2008 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர வகுப்புக்குரிய நாடகமும் அரங்கியலும் பாடநெறிக்கான புதிய பாடத்திட்டத்தில் சொபொகிளிஸின் "அன்ரிகனி" என்னும் கிரேக்க அவலச் சுவை நாடகம் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமையைக் கருத்திற்கொண்டு, க.பொத. உயர்தர வகுப்பில் நாடகமும் அரங்கியலும் பயிலும் மாணவர்களின் நன்மை கருதி, சொபொகிளிஸின் "அன்ரிகனி" கவிஞர் கலாநிதி இ.முருகையன் அவர்களால் தமிழில் ஆக்கப்பட்டு "கர்வபங்கம்' என்னும் பெயரில் நூலாக வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் 28.07.2007 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் கர்வபங்கம் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு. எஸ்.கே. யோக நாதன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். விழாவின் வரவேற்புரையினை திரு.க.திலகநாதன் அவர்களும், வாழ்த்துரையினை பிரதம விருந்தினர் அவர்களும், கர்வபங்கம் நூல் வெளியீட்டுரையினை திரு.ஜோண் சன் ராஜ்குமார் அவர்களும் நிகழ்த்தினார்கள்.


வெளியீட்டு விழாவில் "கர்வபங்கம்" முதற் பிரதியைத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்கள் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து பிரதிகள் பெற்றுக் கொள்ளும் வைபவம் நடந்தேறிய பின்னர் "கர்வபங்கம்" நூலின் அறிமுகவுரையினை கவிஞர் சோ.பத்மநாதன் அவர்களும் ஏற்புரையினை கலாநிதி த.கலாமணி அவர்களும் ஆற்றினார்கள்.

சொபொகிளிஸின் "அன்ரிகனி" கவிஞர் கலாநிதி இ.முருகையன் அவர்களால் ஏற்கனவே தமிழல் ஆக்கப்பட்டிருந்தாலும் காலத்தின் தேவை கருதி அதனை அச்சிற் பதித்து நூல் வெளி வரவேண்டிய ஒழுங்குகள் செய்தவர்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நாடகமும் அரங்கியலும் துறையைச் சேர்ந்த விரிவுரையாளர் திரு.க. திலகநாதன் அவர்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.த.கலாமணி அவர்களுமாவார். கலாநிதி இ.முருகையன் அவர்கள் சுகயீனம் காரணமாக இவ் விழாவிற் கலந்துகொள்ள முடியாமல் போய்விட்டது. இருப்பினும், அவரது நூல் ஞாலத்தின் மாணப்பெரிது. சொபொகிளிஸின் அன்ரிகனி - முருகையனின் கர்வபங்கம் நாடகமும் அரங்கியலும் பயிலும் மாணவர்களுக்கு ஓர் அருமருந்து.

## வேட முகங்களின் கண்காட்சி

வெறுவெளி அரங்கக் குழு யாழ் பல்கலைக்கழகத்தினால் "அகக்கோலங்கள்" என்ற கருப்பொருளில் வேட முகங்களின் கண்காட்சியினை 17.07.2007 செவ்வாய்கிழமையன்று யாழ் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட புதிய கட்டடத் தொகுதியில் காட்சிப்படுத்தியது.

இதில் தனியாள் அரங்க நிகழ்வு, அரங்கின் வடிவமைப்புகள், அரங்கின் பிரிப்புமுறைகள், கடதாசியில் உருவாக்கப்பட்ட வேட முகங்கள், கிரேக்க அவலச்சுவை, மகிழ்நெறி நாடகங்களில் பயன்படுத்தப்பட்ட வேட முகங்கள், உரோம நாடகத்தில் பயன்படுத்தப்பட்ட வேடமுகங்கள், கதகளியின் வேடஉடை, ஒப்பனை என்பன காட்சிப்படுத்தப்பட்டன. இதனைப் பார்ப்பதற்கு நாடக ஆர்வலர்களும், நாடகமும் அரங்கியலும் துறைசார் மாணவர்களும் என சுமார் ஐந் நூறுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர். யாழ் பல்கலைக் கழகத்தின் நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்களுடைய வரலாற்றில் இவ் நிகழ்வு முதல் முயற்சி என்றே கூறலாம். இதன் வளர்ச்சிக்கு அல்லது நேர்த்தித் தன்மைக்கு தொடர் பயிற்சிகள் அவசியமானவை.



சி.நந்தன்

## ஆறாவது நாடகப் பயிற்சி நெறி நிறைவு

செயல்திறன் அரங்க இயக்கத்தினால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற நாடகப் பயிற்சி நெறிகளின் ஆறாவது பிரிவுப் பயிற்சி நெறி நிறைவுற்றுள்ளது.

குழந்தை ம.சண்முகலிங்கம் தலைமையிலான வளாளர் குழுவால் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

ஆறுமாதகாலப் பயிற்சிக் காலமாக கொண்டதால், ஆண்டில் இரண்டு பயிற்சிப் பிரிவுகள் பயிற்சி பெற்று வெளியேறுகின்றன.

இப் பயிற்சியில் இதுவரை 186 பேர் பயிற்சி பெற்றுப் பயன் பெற்றுள்ளனர்.



பயிற்சியில் திறமை சித்தி பெறுபவர்கள் நிறுவனத்தில் ஆற்றுகையாளர் வெற்றிடங்களில் இணைத்துக் கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

கஜி

அரங்க வரலாற்றில் மறைந்து கிடப்பவர்கள்

# "பலபேர் எனக்கு நாடகம் பழக்கி இருக்கினம். ஆனால் குழந்தை சேர் மாதிரி ஒருதரும் நாடகம் பழக்கவில்லை"

கோண்டாவிலில் வசிக்கும் கைலாசபிள்ளை சந்திரகுலசிங்கம் என்பவர் யாழ் பல்கலைக்கழக நூலகர் கவனிப்பாளராக வேலை செய்து வருகிறார். 09.02.1951 ஆம் ஆண்டு பிறந்த இவர் O/L வரை படித்தவர். பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே நாடகத்துறைக்குள் காலடி எடுத்து வைத்துவிட்டார். பிரிதுவிராஜன் போன்ற நாடகங்களில் நடித்தவர். 1967ற்குப் பிறகு இவர் தமது ஊரில் பொன்னுத்துரை என்ற இசை நாடகக் கலைஞரின் அரிச்சந்திர மயானகாண்டத்தில் லோகிதாஸனுக்கு நடித்தவர். பிறகு அவர் செய்த பக்தப்பிரகலாதனிலும் ஒரு பாத்திரம் ஏற்றவர். இவ்வாறு சிறுவயதிலேயே நடிகனாக அறிமுகம் செய்துகொண்டார்.

நாடகத்தில் விருப்பங்காரணமாக, பல்வேறு அமைப்புக்களுடன் இணைந்து நாடகம் நடித்து வந்தார். புத்தூர் பம்மல் நாடக மன்றத்தில் தெய்வமலர், ஏழாலை மயிலங்காட்டுக் கலைஞர்களுடன் பணக்கார மாப்பிள்ளை, கோண்டாவில் ஸ்ரீ வாகீஸ்வரி நாடக மன்றத்தில் ஏகலைவன், ஒருசதம், அலாவுதீன், நடந்துவந்த பாதை தனில் போன்ற நாடகங்களில் நடித்துத் தனது நடிப்பால் மக்கள் மனங்களைக் கொள்ளை கொண்டவர். இதைவிட, இராணி சம்யுக்தா, தியாகதீபம், காசியப்பன் போன்ற நாடகங்களையும் ஊர்களில் நடித்து வந்தார்.

1986-ம் ஆண்டு யாழ் பல்கலையில் வேலை கிடைத்தமை இவர் தனது ஆற்றலை மேலும் வளர்த்துக்கொள்ள காரணமாக அமைந்தது. இவர் இப்போது பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தில் கலை பண்பாட்டுப் பொறுப்பாளராகவும் இருக்கிறார். அந்த வகையில், கலை கலாச்சார நிகழ்வுகளை நடாத்துதல், நாடகக் கலையில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகளில் தம்மை அர்ப்பணித்து வந்தவர்.

பல்கலைக்கழகத்திற்குப் போனபிறகு இவருக்கு 'ஈழத்து நாடக உலகின் தந்தை' கலாநிதி குழந்தை.ம. சண்முகலிங்கம் அவர்களின் தொடர்பு கிடைத்தது. வருடாவருடம் ஊழியர் சங்க நிகழ்வுகளுக்கு நாடகம் போட வேண்டியிருந்ததால் அவரை அணுகி கதையாக்கங்கள் நாடகங்களைப் பெற்றும் அவற்றை நெறிப்படுத்த உதவியையும் பெற்று வந்தவர். 1992இல் உறவுகள், 1999 இல் நரகொடு சுவர்க்கம், பாஞ்சாலி சபதம் போன்ற நாடகங்களை குழந்தை சண்முகலிங்கத்தின் நெறியாள்கையில் நடித்தவர்.

உறவுகள் நாடகத்தில் இவரது நடிப்புத் திறமை பற்றிப் பரவலாகப் பேசப்பட்டது. உறவுகள் நாடகத்தில் தொலைபேசியில் உரையாடுகின்ற ஒரு காட்சிதான் அனைவர் மனதையும் கவர்ந்தது. குழந்தை சண்முகலிங்கம் எழுதிக் கொடுத்த வசனங்களையே மனப்பாடம் செய்து அதற்குரிய உணர்வோடு பேசியிருந்தார். ஆனால், மற்றவர்களுடைய பார்வைக்கு, அவர் கற்பனையில் தானாகக் கதைத்தது போலிருந்தது. பேராசிரியர் சுப்பிரமணியஐயர் இது பற்றிக் கேட்டபோது, குழந்தை ஆசிரியர் கூறிய பதில் 'ஒரு வசனம் கூட அவர் கற்பனையில் பேசவில்லை. நான் எழுதிக் கொடுத்ததைத்தான் பேசினார். இந்த இடத்தில் நடிகனின் திறமைதான் வெளிப்பட்டிருக்கிறது. சில இடங்களில் இயக்குனரோ, கதாசிரியரோ தள்ளி வைக்கப்படுகின்றனர். காரணம் நடிகன் அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குள் இல்லை. அவர் தன்னுடைய கற்பனைக்குள் நிக்கிறார். இந்த இடத்தில் கதாசிரியரையும் இயக்குனரையும் வெளியால் வைத்துக் கொண்டு நடிகனைப் பாக்கினம். ஏனெண்டால் அது உணர்வு பூர்வமான வெளிப்பாடு' என்றார்.

இவர் குழந்தை சண்முகலிங்கத்திடம் மட்டுமல்லாது தமிழ்த்துறைப் பேராசிரியர் பாலசுந்தரம், ரவி ஆசிரியர் போன்றோரின் நெறியாள்கைகளிலும் நாடகங்கள் செய்துள்ளார். கோவலன் கூத்து, ஆளுக்காள் போன்றவையே அவை. இதுபற்றி அவர் கூறும்போது, 'பலபேர் எனக்கு நாடகம் பழக்கி இருக்கினம். ஆனால், குழந்தை சேர் மாதிரி எனக்கு ஒருதரும் நாடகம் பழக்கவில்லை. அவர் நடிப்பை, பாத்திரத்தை எங்களுக்குள்ளாலை தான் கொண்டு வருவார். ஏலாத சந்தர்ப்பத்தில் மட்டும் தான் வழிகாட்டுவார்' என்று குழந்தை ஆசிரியரின் நெறியாள்கைத் தன்மையைக் கூறினார்.

இவர் நன்கு கற்றறிந்த, பட்டம் பெற்றவர்களோடு இணைந்தும் நாடகம் நடித்திருக்கிறார். நாடகங்களைப் பார்த்த, அதிலீடுபட்ட அனுபவத்தை உடையவர்களுடனும் ஊர்களில் இணைந்து நாடகம் செய்துள்ளார். அந்த வகையில் பல்கலையில் பெற்ற நாடக அனுபவத்தையும் ஊர்களில் பெற்ற நாடக அனுபவத்தையும் கேட்டபோது, 'கம்பசில் நாடகம் செய்யும்போது சினிமாவை ஒரு கரையில தூக்கிப் போட்டுட்டுத் தனித்துவமாச் செய்தம். ஊருக்குள்ள நாடகம் செய்யும்போது சினிமாவைக் கலந்து செய்தம். குறிப்பாக, சினிமாப் பாடல்களை சேர்த்துக் கொண்டோம். நாடகக் கலை அழிவதற்கு இதுவும் ஒரு காரணம். அந்த நேரத்தில் மக்களின் கவர்ச்சி இரசனை சினிமாவுக்குள்ள இருந்ததால் அப்பிடி வந்திட்டுது' என்றார்.

**நாடக நடிகர் கைலாசபிள்ளை சந்திரகுலசிங்கம் பற்றிய குறிப்பு**

முன்னைய காலங்களில் நாடகம் என்றால் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து இருந்து பார்த்துவிட்டு விடியத்தான் செல்வார்கள். ஆனால், இப்போது அதிகரித்த வசதிகளும் நாட்டுச் சூழலும் நாடகத்தின் மீது இரசனையே இல்லாமற் செய்துவிட்டது. இருப்பினும், நாடகமே உயிர் என்று தம்மை அர்ப்பணித்த கலைஞன், தனக்கென எதையும் சேர்த்து வைக்க முடியாத நிலையில் உள்ளான். 'நாடகம் சில மனிதர்களை ஏழை யாக்குகின்றது. சில நடிகர்கள் நாடகம் நடிக்கிறதுக்காகத் தன்னுடைய குடும்பத்தைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் நாடகமே உலகமென்று இருந்த தால் அவர்களுடைய குடும்பம் வறுமைக் கோட்டுக்குக் கீழ் தான் வாழ்கிறது. இசை நாடகக் கலைஞர் தைரியநாதன் அப்பிடித்தான் இருந்தவர். நாடக மெண்டால் வேலைக்கே போகமாட்டார். நாடகம் நாடகம் எண்டு திரிவார்' என்றார்.

இவரோடு, பல்கலைக் கழகத்தில் சேர்ந்து நடித்தவர்கள் செல்வரட்ணம், நாகராஜா (சண்டிலிப்பாய்) முகுந்தன் (கோண்டாவில்) தங்கராஜா (யுனியன் தலைவர்)

*(தொடர்ச்சி 18ம் பக்கத்தில்)*

# இரு நாடக நூல்கள் வெளியீட்டு விழா

செயல் திறன் அரங்க இயக்கத்தின் கொழும்புக் கிளை யூன் மாதம் 27ம் திகதி இரு நாடக நூல் வெளியீட்டு விழாவை கொழும்பு தமிழ் சங்கத்தில் நடத்தியிருந்தது.

துணிவு, இடிகரை மண் ஆகிய இரு நூல்கள் அன்றைய தினம் வெளியிட்டு வைக்கப்பட்டன. இந்த விழாவில் கனவு பலித்திடுமோ என்ற கவிதைக்கான படிம வெளிப்பாட்டரங்க நிகழ்வும் நடைபெற்றது.

நிகழ்விற்கு கௌரவ பிரதி அமைச்சர் திரு.பெ. இராதாகிருஷ்ணன், (மலையக மக்கள் முன்னணி) அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். இயந்திரமயமானதும், துன்பம் நிறைந்ததுமான சூழலில் இவ்வாறான நிகழ்வுகள் ஆறுதல் தருகின்றன. மக்கள், ஆறுதல் பெறுவதற்கு கலைகள் முக்கியமானவை அவற்றைப் பேணிப்பாதுகாக்க வேண்டும். நாளாந்தம் பலர் காணாமல் போதல் தொடர்பான தகவல்கள் எம்மிடம் வருகின்றன. முடிந்தவரை முயற்சிக்கிறோம். அவ்வறிற்கிடையில் இவ்வாறான நிகழ்வுகளில் பங்கு கொள்வது மனநிறைவைத் தருகிறது என்றார்.

இந்நிகழ்வில் சிறப்புவிருந்தினர்களாக திரு.பொ. கேசவராஜ் (இயக்குனர் தினக்குரல்) திருமதி மாலதி சிவகுமார் (இயக்குனர் நடேஷ்வராலயா நுண்கலைக் கல்லூரி) திரு.வீ.தனபாலசிங்கம் (பிரதம ஆசிரியர் - தினக்குரல்) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நூல்களுக்கான விமர்சன உரைகளும் நடைபெற்றன. இதில் கூத்தரங்கத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு நூலும் விமர்சனத்துக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

"துணிவு" நூலுக்கான விமர்சனத்தை கவிஞர் திரு.சடகோபன் அவர்கள் வழங்கியிருந்தார்.

"இடிகரைமண்" நாடக நூலுக்கான விமர்சனத்தை இளையதம்பி தயானந்தா அவர்கள் வழங்கியிருந்தார். இளம் எழுத்தாளர்களை இந்த நூலில் இருந்து இனங்காணமுடிகிறது. அவர்கள் தொலைக்காட்சி நாடகங்கள் ஆவணத்திரைப் படங்கள் தயாரிப்புக்களிலும் ஈடுபட வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.



இதனைத் தொடர்ந்து 'கனவு பலித் திடுமோ' என்ற கவிஞர் சடகோபனின் கவிதையொன்றுக்கான படிமக்காட்சிகள் செயல் திறன் அரங்க இயக்கத்தின் கொழும்புகிளை அங்கத்தவர்கள் நிகழ்த்தியிருந் தார்கள். மிகவும் உணர்ச்சி செறிவு மிக்க அந்த இருபது நிமிட ஆற்றுகை இசையோடு பிசைந்த வார்த்தைகளையும் அசைவுக் கோலங்களையும் படிமங்களையும் கொண்டு மேடைவெளியை நிறைத்திருந்தது.

நூல்களின் முதல் பிரதியை செயல் திறன் அரங்க இயக்கத்தின் இயக்குனரிடமிருந்து பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணன் அவர்கள் பெற்றுக் கொண்டார். சிறப்புப் பிரதிகளை பொ.கேசவராஜ் (இயக்குனர் தினக்குரல்), வீ.தனபாலசிங்கம் (பிரதம ஆசிரியர் - தினக்குரல்), ஈ.வி.டேவிப்ராஜு (ஊடக ஆலோசகர் தினக்குரல்), ஆ.இரத்தினவேலோன் (எழுத்தாளர்), ஆர்.யோகராஜன் (இலங்கை வானொலி) ஏ.ஆர்.என்.நிரோஷன் (சூரியன் எவ்.எம்), ஜ.கஜமுகன் (சக்தி எவ்.எம்), சி.சரவணபவன் (இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம்) வ.சிவயோதி (நாடகக் கலைஞர்), தம்பு சிவா (இலக்கியவாதி), பாஸ்கர் (தமிழ்சங்கம்) ஆகியோர் பெற்றுக் கொண்டார்கள்.

## பலபேர் எனக்கு நாடகம் பழக்கி....

(17ம் பக்கத் தொடர்ச்சி)

போன்றவர்களைக் குறிப்பிடலாம். பல்கலைக்கு வெளியே சந்திரசேகரம், சபாபதி, தர்மகுலசிங்கம், சண்முகம் தேவராசா போன்ற இவரது ஊரைச் சேர்ந்த கலைஞர்களைக் குறிப்பிடலாம்..

ஒரு நடிகன் தன்னை மிகைப்படுத்திப் பார்க்க கூடாது என்ர எண்ணம் கொண்ட சந்திர குலசிங்கம் அவர்கள் நாடகத்தினுடாகத் தன்னுடைய திறமையை வெளிப்படுத்திச் சிறந்த நடிகனாக்கிக் கொண்டார். 2003ற்குப் பின்பு நாடகங்கள் செய்வதைத் தவிர்த்து விட்டார். அதற்கு நாட்டுச் சூழல் ஒரு காரணம் என்று குறிப்பிடுகிறார். ஏனையவரது ஒத்துழைப்பு கிடைக்கக் கூடிய சூழ்நிலையும் இல்லை. அதே நேரம் திக்குத் திக்காகச் சென்றுவிட்ட கலைஞர்களை ஒன்று சேர்ப்பதும் சிரமம் என்றும் குறிப்பிட்டார்.

- *திலகா*

## ஆங்கில தின நாடகப் போட்டிகள்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் 31.07.2007 அன்று நடைபெற்ற ஆங்கில தின விழாவில் நாடகப் போட்டிகள் இடம்பெற்றன.

ஆங்கில மொழியில் சரளமாக உரையாடு வதற்குரிய ஆற்றலைக் கொடுப்பதாக நாடகப் போட்டிகள் அமைந்திருந்தன. இரண்டாம் வருட இசை, நடனம், நாடகம், சித்திரம், ஆரம்பக்கல்வி, விஷேட கல்வி முதலிய தமிழ்மொழி மூலமான துறைகளுக்கு, கவிஞர் சோ.பத்மநாதன் அவர்கள் எழுதிய "The Boy Without a Head" எனும் நாடகம் வழங்கப்பட்டிருந்தது. இரண்டாம் வருட கணிதம், ஆங்கிலம், விஞ்ஞான நூலக விஞ்ஞானம் ஆகிய ஆங்கில மொழி மூலமான மூன்று துறைகளும் தாமே கதையெடுத்து, நாடகங்களைத் தயாரிக்க வழிப்படுத்தப்பட்டிருந்தனர்.

இப்போட்டியில் இரண்டாம் வருட ஆங்கிலத்துறை முகிழ்நிலை ஆசிரியர்களின் "Caucassion Chalk Circle" எனும் நாடக ஆற்றுகை முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது. வெற்றியீட்டிய ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன.

- மஹா



# "துணிவு" சிறுவர் நாடக நூல் பற்றிய உணர்வுகளும் எண்ணங்களும்

கொழும்பு தமிழ் சங்கத்தில் 25.06.2007 அன்று நடைபெற்ற இரு நாடக நூல்கள் வெளியீட்டு விழாவில் நிகழ்த்தப்பட்ட நூல் விமர்சன உரை.

## கவிஞர்: சடகோபன்

அரங்கு இன்று சமூகக் கட்டமைப்பு மாற்றத்திற்கான கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் இப்பணியை ஆரம்பித்து வைத்தவர் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள். அவர் வழி இன்று தே.தேவானந்த் தலைமையிலான இளைஞர் குழு முனைப்போடு முன்னெடுத்து வருகின்றது. இந்தப் பணிகளுக்கூடாக போரால் பாதிக்கப்பட்ட மக்கள் உளவியல் ரீதியான இலேசான தன்மையை உணருகி றார்கள். மானிட உருவாக்கத்திற்கான, நுட்பமாக அரங்காற்றுகைகள் காணப்படுகின்றன. இதனை நான் தொன்னூறு களின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போதும், நேரில் கண்டும், ரசித்தும் தரிசித்தும் உள்ளேன்.

இங்கு துணிவு நூலில் உள்ள எழுத்துருக்கள் பயிற்சிக் களங்கள், பட்டறைகளின் மூலம் உருவாக்கப்பட்டுள் ளன. கடந்த மூன்று வருடகாலத்தில் 16 களப்பயிற்சி களை நடாத்தி 1100 ஆசிரியர்களுக்கு குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் தலைமையில் பயிற்சி கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், இக் களப்பயிற்சி கள் ஆரம்ப முயற்சிகளாக, ஒரு தூண்டுதலே தவிர எழுத்துருவுக்கான தகுதிநிலையோ அல்லது போது மான தன்மையோ அல்ல. இந்தப் பின்புலத்தில் இங்கு தரப்பட்டுள்ள 11 எழுத்துருக்களையும் நோக்கலாம். இவற்றில் தரநிலையில் உயர்ந்தவையாக இரண்டு நாடகங்கள் காணப்படுகின்றன. ஒன்று துணிவு மற்றயது புதுமை. இவை இரண்டும் பராட்டுக்கும் சிறப்புக்கும் உரியவை.

சிறுவர் நாடகங்கள் பல்வேறு வகைப்படுகின்றன. சிறுவர்களால் சிறுவர்களிற்கு நிகழ்த்தப்படுவது, பெரியவர்களால் சிறுவர்களிற்கு நிகழ்த்தப்படுவது, சிறுவர்களாலும் பெரியவர்களாலும் சிறுவர்களிற்கும் பெரியவர்களிற்கும் நிகழ்த்தப்படுவது. அந்தவகையில் இந்த துணிவு நாடகம் சிறுவர்களிற்கு மட்டுமல்லாது பெரியவர்களிற்கும் தகவல்களைப் பரிமாற முயல்கின் றது. காணாமற் போதல்களைத் தவிர மற்றெல்லாமே காணாமல் போகின்ற காலம் இது. பக்கம் 30 இல் எனது கவிதை ஒன்றும் நினைவிற்கு வருகிறது. காணாமல் போவது இன்றும் தொடர்கின்ற கதை அதனை மிகத் தத்ரூபமாக இந் நாடகம் விளக்குகிறது. எங்களுடைய வாழ்வை எங்களுடைய நாட்களை யானைக் கதைக் கூடாக மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் நகர்த்தியுள்ளார் நாடக ஆசிரியர். அவருக்கு அரங்க ஆற்றுகையில் உள்ள புலமை இங்கு வெளிப்படுகிறது. ஆனால், ஒரு சிறு நெருடல் என்னவென்றால் பேச்சு மொழியை முற்றாகப் பயன்படுத்தாமல் இடையிடையே எழுத்து மொழி வருகிறது.

கடல் வளங்களைப் பாத்திரங்களாகக் கொண்டு படைக்கப்பட்ட 'புதுமை' உண்மையில் புதுமையானது. அழகாகவும் இயல்பாகவும் நாடகம் உருப்பெறுகிறது. அலைகள், மீன், நண்டு, இறால், சிப்பி, சங்கு, கடலாமை இவற்றின் அழகோ அழகு. இதில் மஹாகவி புதியதொரு வீட்டில் எழுதிய கவிதை நினைவிற்கு வருகிறது.

" சிறு நண்டு மணல் மீது
படம் ஒன்று கீறும்
அலை வந்து சிலநேரம்
அதைக் கொண்டு போகும்.."

'மண்ணில் தொலைந்த மனதை தேடி' என்ற எனது கவிதைத் தொகுதியில் வருகின்ற

" இரையும் கடலும்
தரையில் உரசி
இதயம் நனையும்
கதைகள் சொல்லும்"

"அலை நனைத்த மணற் பரப்பில்
ஓடும் சிறு நண்டுகளாய்.."

என்ற கவிதைகள் என் நெஞ்சை நிறைக்கின்றன. வாழ்த்துக்கள் நித்திகா.

இந்த 11 நாடகங்களிலும் துணிவு என்ற நாடகம் வேறுபட்டு செழுமைபெற்று நிற்கிறது. புதுமையும் புதுமை செய்கிறது. இவை அனைத்திலும் பொதுவாக சலிப்பைத்தரும் விடயம் யாதெனில் பெரும்பாலான நாடகங்களின் பாத்திரங்கள் சிங்கம், கரடி, மான், மயில், நரி போன்ற பாத்திரங்கள் மட்டும் வருவதாகும். வேறுவகைப்பாடுகளும் இணைக்கப்பட்டிருந்தால் சுவையாக இருந்திருக்கும். இதனைவிட வேறு வேறு மொழிநடைகள் எழுத்துருவில் வருகின்றபோது காணப்படுகின்ற முரண்பாடு அல்லது இணைவுத் தன்மை இல்லாமை நெருடலாக காணப்படுகிறன்றது. ஆனால் எல்லாவற்றையும் விடுத்து நாடகம் எழுத்துருப்பெற்ற செயன்முறை, அதனை அரங்க ஆற்றுகையாக வெளிப்படுத்தும் செயன்முறை என்பவற்றிற்கூடாக அடையப்பட எதிர்பார்க்கும் இலக்கு என்பன முக்கியமா னது. பாராட்டப்படவேண்டியது.




எனவே, ஒரு இளைஞர் அணி சமூக கட்டமைப்பு மறுசீரமைப்பு நடவடிக்கையில் மிகுந்த நம்பிக்கையுடன் ஈடுபடுகிறது. அதனை செயல்படுத்துகின்ற தம்பி தேவானந்தா விற்கும் அவரது குழுவினருக்கும் எனது வாழ்த்துக்கள் உரித்தாகும்.

கூத்தரங்கம்
KOOTHHARANGAM

# பாடசாலைகளில் அரங்கச் செயற்திட்டங்கள்

புதிய பல கல்விச் செயற்திட்டங்கள் அவ்வப்போது ஆட்சிமாற்றம் நடைபெறுகின்ற காலங்களில் அறிமுகம் செய்யப்படுகின்றன. ஆசிரியர்களின் வினைத்திறன் அதிகரிப்புக்கான திட்டங்கள், பயிற்சிகள், பட்டறைகள் ஏலவே அதற்குள் அடங்கும்.

ஆசிரியர் வாண்மை விருத்திச் செயற்பாடுகள், பிள்ளை மையக் கல்வி போன்றன முக்கியமான கல்வி அபிவிருத்தி எண்ணப் பாங்குகளாக இனங்காணப்பட்டிருக்கின்றன.

எவ்வாறான வகைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தினாலும் கல்விக் கட்டமைப்பில் பாரியளவு முறைமைசார் மாற்றங்கள் நடைபெறுவதில்லை என்று பல அதிபர்களும் கல்வியதிகாரிகளும் ஆதங்கப்படுவதைக் கேட்க்க முடிந்திருக்கிறது.


கல்விச் சமூகத்தில் நடத்தை மாற்றங்களும் (Behavioral Change & Attitude change) எண்ணப் பாங்கு மாற்றங்களும் ஏற்படாதவரை 'எமக்கான கல்வி' என்ற கோட்பாட்டு நிலை வளர்ச்சி சாத்தியமற்ற தொன்றாகவே இருக்கப்போகிறது.

அண்மையில் கல்வி அபிவிருத்தி செயற்திட்டங்களில் பாடசாலைகளுக்கு அதிக அதிகாரம் கொடுத்து நடைமுறைப்படுத்தும் அதிகாரப் பரவலாக்கல் செயற்திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. இதற்காக பாடசாலைகள் தமது தேவைகளை மதினங்கண்டு பாடரீதியான அபிவிருத்திக்கு ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் நன்மை தரும் திட்டங்களை வகுத்து அதனைச் செயற்படுத்த முடியும். மிக நல்லதொரு செயற்திட்டம் எவ்வாறு நடைபெறுகின்றது என்பது தான் இங்கு நோக்கப்பட வேண்டியதும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியதுமாக உள்ளது.

கல்வித் திணைக்களத்தின் உள்ளக வளவாளர்களும், வெளியக வளவாளர்களும் இத்திட்டத்தில் உள்ளீர்க்கப்பட்டு தாக்கவன்மைமிக்க செயற்திட்டம் தீட்டப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. அதிகமான பாடசாலைகள் தமது ஆளணிவளங்களை பயன்படுத்துவதைவிட வெளியில் இருந்து வளவாளர்களை எடுப்பதில் அதிக அக்கறை செலுத்துகிறார்கள். இதனால், கல்வித் திணைக்களம் சார்ந்த, மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் சார்ந்ரோர் பாடசாலைகளிடம் ஒப்பந்த அடிப்படையில் வேலைகளை பேரம்பேசி எடுத்து, தமக்குக் கீழ் ஒரு ஆளணியை திரட்டி இச் செயற்திட்டங்களை வியாபார ரீதியாக நடத்த ஆரம்பித்துள்ளார்கள். செயற்பாட்டின் தரம் பற்றியதான கேள்விகள் இதில் உண்டு.

இதில் நாடகத் துறையும் சிக்குண்டு தவிக்கிறது. மாணவர்களுக்கு நாடகக் களப்பயிற்சி, குடும்பப் பாடசாலைகளுக்கு நாடகக் களப்பயிற்சி, நாடகங்கள் பழக்குதல் என்பவற்றிற்கு இன்று பாடசாலைகள் பணம் கொடுக்க ஆரம்பித்திருக்கின்றன. இதுவொரு நல்ல அடைவாகக் கொளப்பட்டாலும் நாடகத்துறையூடாக அடையப்பட வேண்டிய இலக்குகள் அடைவுகள் பாடசாலை பாடத்திட்டங்களோடு இணைந்து திட்டமிடப்பட்டு நடத்தப்படாமல் எழுந்தமானமாக நடைபெறுவதும் தகுதியற்றோரை ஒப்பந்தம் எடுக்கும் பெரியவர்கள் பயன்படுத்தி இலாபமீட்ட முயல்வதால் நாடகக் கலை மீண்டுமொரு தோல்வியைச் சந்திக்க நேரிடும். கிடைக்கின்ற வளங்களையும் ஏற்படுகின்ற மாற்றங்களையும் உரியமுறையில் பயன்படுத்தி நாடகத்துறை வளர்ச்சிக்கும், கல்வித்துறை வளர்ச்சிக்கும் உதவுவோமாக!

- ஆசிரியர்


கண்டி வட்டார,
தெல்தோட்டை ஆலய கட்டிட நிதிக்காக,
கண்டி கிறிஸ்து நாதராலய வாலிபர் கழகம் அளிக்கும்
தாசன் கலா மன்றத்தின்
2-வது படைப்பு
"நான் நடந்த பாதையிலே...."
(சமூக நாடகம்)
தலைமை
உயர்திரு. N. இராமலிங்கம் J. P. அவர்கள்
(வறக்கலாந்தை தோட்ட உரிமையாளர்)
அரங்கு:-
கண்டி திரித்துவக் கல்லூரி மண்டபம்
நேரம்:-
26—11—68 மாலை 6-00 மணி.
சமர்ப்பணம்
1936ம் ஆண்டு தொடக்கம் பள்ளக்கலையைச் சேர்ந்த A. C. தமிழ்ப் பாடசாலையில் ஆசிரியப் பணிபுரிந்து 5-3-66ல் காலஞ்சென்ற எம் அருமைத் தந்தை திரு. S தேவதாசன் அவர்களுக்கு இந்நாடகத்தைச் சமர்ப்பிக்கின்றோம். — — — வணக்கம்!
"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்." தமிழ் மறை.
'தாசன்ஸ்'

# பதிவுகள்

கண்டி வட்டார தெல்தோட்டை ஆலய கட்டிட நிதிக்காக, கண்டி கிறிஸ்து நாதராலய வாலிபர் கழகம் நான் நடந்த பாதையிலே என்ற சமூக நாடத்தினை கண்டி திரித்துவக் கல்லூரி மண்டபத்தில் 26.11.1968 ஆம் ஆண்டு மாலை 6.00 மணிக்கு மேடையேற்றியது.

இந் நாடக மேடையேற்றத்தின் போது தலைமை தாங்கியவர் வறக்கலாந்தை தோட்ட உரிமையாளர் உயர்திரு.என்.இராமலிங்கம் ஜே.பி அவர்கள்.

இந் நாடகம் தாசன் கலா மன்னறத்தின் 2 வது படைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், 1936ம் ஆண்டு தொடக்கம் பள்ளக்கலையைச் சேர்ந்த ஏ.சி.தமிழ்ப் பாடசாலையில் ஆசிரியப் பணிபுரிந்து 66ம் ஆண்டு காலஞ்சென்ற திரு எஸ்.தேவதாசன் அவர்களுக்கு இந்நாடகம் சமர்ப்பணமாக மேடையேற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

AnDrA PRINTERS T.P 021-4590268